பக்கங்கள்: பதினாறு+I,II

# உதயன்

விலை ரூபா 20.00

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 21 திங்கட்கிழமை (04.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 129

# மக்கள் கவனம் கிரிக்கெட்டில் இருக்க திட்டமிட்டு எரிபொருள் விலை ஏற்றம்

## அரசின் கபடத்தனத்தை அம்பலப்படுத்துகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஏப்ரல்.04

சமையல் எரிவாயு உட்பட பெற்றோல், டீசல் ஆகியவற்றின் விலை உயர்வை மக்களே ஏற்கவேண்டியுள்ளது. அது மட்டுமன்றி எரிபொருள்களின் விலை அதிகரிப்பானது அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும் அதிகரிக்கச் செய்யும். எனவே மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்களின் கவனம் கிரிக்கெட்டில் இருந்த சமயம் திட்டமிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜே.வி.பி. தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அரசு மீண்டும் ஒருமுறை லாவ் காஸ், லிற்றோ காஸ் ஆகியவற்றின் விலைகளை 238 ரூபாவால் அதிகரித்துள்ளது. அது மட்டுமன்றி எரிபொருள்களின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எரிபொருள்களின் விலை உயர்வுப் பிரச்சினைக்கு மாத்திர மின்றி போக்குவரத்துக் கட்டண அதிகரிப்பு, பொருள்களின் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பாதீர் சுவிற்ஸர்லாந்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஏப். 04

அகதி அந்தஸ்து கோரிய இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரி சுவிற்ஸர்லாந்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

சுவிற்ஸர்லாந்தின் பேர்ண் நகரில் உள்ள நாடாளுமன்றத்துக்கு முன்பாக நேற்று இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அச்சுறுத்தலுக்குள்ளான இனங்களுக்கான சர்வதேச அமைப்பு, சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட மனித உரிமை அமைப்புகள், சுவிஸ் நாட்டின் அரசியல் கட்சிகளான சோஷலிசக் கட்சி, பசுமைக் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும், பெருந்திரளான புலம்பெயர் தமிழர்களும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்ட மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்தாலும், ஆள் கடத்தல்களும், அச்சுறுத்தல்களும் இன்னமும் இடம்பெற்று வருகின்றன. அதற்கான போதிய ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன,

எனவே, இந்த நிலையில் இவர்களைத் திருப்பி அனுப்புவது ஆபத்தான ஒரு செயலாகும் எனத் தெரிவித்தனர். சுவிஸ் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிப்பதற்கான மனுவில் கையொப்பங்களும் பெறப்பட்டன. (ஒ-சி)

## கடற்படைச் சிப்பாய்கள் மர்மம் நீடிப்பு ஆயுதக் குழுவினால் கடத்தப்பட்டனரா?

கொழும்பு, ஏப்.04

முல்லைத்தீவு கடற்பரப்பில் காணாமற்போன நான்கு கடற்படை சிப்பாய்களின் நிலைமை என்ன என்பது தொடர்பாக இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்க வில்லை.

- இவ்வாறு கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் பிரசன்ன கோசல வர்ணகுலசூரிய நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கடற்படைச் சிப்பாய்கள் காணாமற்போய் நேற்றுடன் ஆறு நாள்கள் கடந்துள்ள நிலையில் அவர்கள் காணாமற்போனது இன்னும் மர்ம மாகவே உள்ளது என்றும் அவர் கூறினார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நான்கு கடற்படைச் சிப்பாய்கள் டிங்கிப் படகு ஒன்றுடன் கடந்த மாதம் 29ஆம் திகதி காணாமற் போயிருந்தனர்.

இதனையடுத்து, கரையோர பிரதேசங்களில் முப்படையினரும் கூட்டாக இணைந்து விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் பிரதிபலனாக வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் வைத்து சிப்பாய்கள் பயணித்த டிங்கிப் படகைப் படையினர் கண்டுபிடித்தனர். படகுக்கு எதுவித சேதமும் ஏற்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் அதில் இருக்கவில்லை. அவர்கள் மர்மமான முறையில் காணாமற் போயிருந்தனர்.

கடற்படைச் சிப்பாய்கள் காணா மற்போன அதே (15 ஆம் பக்கம் பார்க்க)

## பாண் மற்றும் பணிஸ் விலைகளும் உயரலாம்

கொழும்பு, ஏப்.04

எரிபொருள்களின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பாண் உட்பட பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக அடுத்த வாரம் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் சமையல் எரிவாயு மற்றும் டீசல் மூலமான அடுப்பு (15 ஆம் பக்கம் பார்க்க)

## மும்மொழிகளிலும் பெயர்ப்பலகைகள் அமைச்சர் வாசு கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, ஏப். 04

சகல அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் இடம்பெறவேண்டும். குறைந்தபட்சம் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளும் கட்டாயம் இடம்பெறச் செய்ய வேண்டும்.

- இவ்வாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு நகரின் சில இடங்க ளில் பிழையாக பெயர்ப் பலகை கள் காணப்படுகின்றன. சில பெயர்ப் பலகைகள் ஆங்கிலத்தில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் தொல்லியல் நிபுணர்கள் நேற்று யாழ்ப்பாணம் வருகை

### பல்கலைக்கழகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.4

அம்பாந்தோட்டை மாவட்டம் திஸ்ஸமகாராம பகுதியில் ஆய்வுகளை நடத்தி வரும் ஜேர்மனிய தொல்லிய நிபுணர்கள் நேற்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக தொல்லியல் மையத்துக்கு வருகைதந்து கலந்துரையாடியுள்ளார்கள்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் க. புஸ்பரட்ணம் விடுத்த விசேட அழைப்புக்கு அமையவே இக்குழுவினர் யாழ். வந்தனர்.

இக் குழுவில் டாக்டர் ஹாங்ஜோர்ஜ் வெஸ்ஸர், (15 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பஸ் கட்டணம் உயரும்

கொழும்பு, ஏப்.04

எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பஸ் கட்டணத்தை அதிகரிக்கத் தனியார் பஸ் உரிமை யாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக நாளை மறுதினம் புதன்கிழமை கூடி ஆராயப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த (15 ஆம் பக்கம் பார்க்க)

## உலகக் கிண்ணத்தை அடுத்து தமிழரை தாக்கியோர் மீது நடவடிக்கை எடுக்குக!

### இல்லையேல் ஆர்ப்பாட்டம் என்கிறார் தொண்டமான்

ஹட்டனில் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்திய கும்பல் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்காவிட்டால் ஹர்த்தால் நடவடிக்கையொன்றுக்கு அழைப்பு விடுக்கப் போவதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்திய இலங்கை கிரிக்கெட் அணிகள் மோதிய உலகக் கிண்ண இறுதிப் போட்டியினைத் தொடர்ந்து ஹட்டனில் மலையக இந்திய வம்சாவளித் தமிழர்கள் வசிக்கும் குடியிருப்புகளுக்குள் புகுந்து கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இது தொடர்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மேலும் கூறியவை வருமாறு-

தாக்குதல் காரணமாக சமநலகம, ஹிஜ்ரா புர (15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அணிக்கு ஜனாதிபதி வாழ்த்து

கொழும்பு, ஏப்.04

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் வெற்றியின் விளிம்பு வரை இலங்கை கிரிக்கெட் அணி செல்லக்கூடியதாக இருந்தமைக்கு முதலில் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் இடத்தை சுவீகரித்துக் கொண்ட இலங்கை அணிக்கு விடுத்துள்ள இந்த (15 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




| | | |
|---|---|---|
| யாழ் | 32°c | 25°c |
| மன் | 34°c | 25°c |
| வவு | 36°c | 21°c |
| முல் | 31°c | 25°c |
| கிளி | 31°c | 25°c |

அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

# இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் பயங்கரவாதிகளா? ஐ.நா. பிரதிநிதியின் கூற்று அரசியல் நாகரிகமற்றது

## மல்லாகத்தில் நேற்று மாவை எம்.பி. கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.4

இந்தியா ஒரு பயங்கரவாத நாடா? இல்லை அங்குள்ள கிரிக்கெட் வீரர்கள் புலிப் பயங்கரவாதிகளா? ஐ.நா.பிரதிநிதியின் கூற்று அரசியல் நாகரிகமற்ற ஒன்றாகும் என்று கண்டித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மல்லாகக் கிளைக் காரியாலயத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட கணினி, தையல் பயிற்சி நிலையத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் வழங்கப்பட்ட கணினிகள் மற்றும் தையல் இயந்திரங்களைக் கையேற்று அதன் அங்குரார்ப்பண வைபவத்தில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே மாவை இப்படிக் குறிப்பிட்டார். மாவை சேனாதிராசா தொடர்ந்து பேசும் போது:-

விளையாட்டு அரங்குகளின் மூலம்தான் நல்லிணக்கம் ஏற்படும் என்ற சித்தாந்தத்தையே சிதைத்து விட்டார் அரிசி ஐ.நாவின் பிரதிநிதியான மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா

கிரிக்கெட் போட்டியில் இந்தியாவைத் தோற்கடித்து விட்டால் அது பயங்காரவாதத்தை வெற்றி கொண்டதற்கு ஒப்பாகும். இந்த வெற்றியை இராணுவத்தினருக்கு கௌரவமளித்து சமர்ப்பணம் செய்வோம் என்று யுத்த வெறியூட்டும் வகையில் கூறி உள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறையில் இருந்துகொண்டு கிரிக்கெட் வெற்றி பிரபாகரனைத் தோற்கடித்தமைக்குச் சமமாகும் என்று கூறுகின்றார்.



இங்கே இவர்கள் இருவருமே உலகமே ஆவலுடன் அவதானித்த விளையாட்டுப் போட்டியை ஒரு யுத்தகளமாக்கி வெறியூட்டும் வகையில் பேசுகின்றனர். அப்படியானால், இந்தியா ஒரு பயங்கரவாத நாடா? இல்லையென்றால் இந்திய கிரிக்கெட் வீரர்கள் புலிப் பயங்கரவாதிகளா? என்று கேட்கின்றேன். அரசியல் நாகரிகமற்ற இக் கூற்றை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அண்மையில் இங்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா இங்குள்ள சிரேஷ்ட அமைச்சர்கள் முன்னிலையிலேயே கூறினார் 13 ஆவது அரசியல் திருத்தத்துக்கு அப்பால் சென்று நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று.

அரசும் அமைச்சர்களும் அப்போது தலையாட்டிக் கொண்டிருந்தனர். ஆனால், ஜனாதிபதியோ பொலிஸ் அதிகாரம் வழங்கப்படமாட்டாது; வழங்கமாட்டேன் என்று தன்பாட்டில் கூறிக் கொண்டு போகிறார்.

**எல்லா வகையிலும் தமிழரை ஓரம்கட்டிவரும் அரசு**

அதிகாரப் பரவல் எல்லாவற்றையும் தன் கையில் வைத்துக் கொண்டுள்ள அரசு, எல்லா வகையிலும் எம்மை ஓரம் கட்டுகின்றது. கல்வித்துறை என்றால் என்ன, ஏனைய எமது விடயங்கள் என்றால் என்ன மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே நடத்துகின்றனர்.

தென்பகுதியில் உள்ள ஏழு பல்கலைக்கழகங்களை சர்வதேச தரத்துக்கு அபிவிருத்தி செய்வதாகக் கூறிய ஜனாதிபதி, யாழ்.பல்கலைக் கழகத்தை ஒதுக்கிவிட்டார். உயர் கல்வி அமைச்சுடன் பேசியதன் பயனாகவே இந்திய அரசின் உதவியுடன் யாழ்.பல்கலைக்கழகம் சீரமைக்கப்படவுள்ளது.

இன்று உலக நாடுகளில் கல்வித்துறை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. அனைத்தும் கணினிமயமாகிவிட்டன. ஆனால், பெரிதும் பாதிக்கப்பட்ட பின் தங்கிய எமது கிராமங்களுக்கு அந்த வசதிகள் இல்லை.

**சரவணபவன் எம்.பிக்கு மாவை பாராட்டு**

கல்விப் பணியில் மிகவும் அக்கறை கொண்டவரான நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தனது சொந்த முயற்சியில் பின்தங்கிய கிராமங்களில் கணினிப் பயிற்சி நிலையங்களையும் தொழிற்பயிற்சி நிலையங்களையும் ஆரம்பித்து எமது எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டதுபோல் அடித் தளம் இட்டுள்ளார். அவருக்கு நாம் நன்றி உடையவராவோம்.

சகல துறைகளிலும் நாம் வெற்றி பெற வேண்டும். எமது சக்தியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் எமது சக்தியைப் பலப்படுத்திக் கொண்டதால்தான் இன்று அரசாங்கம் எம்முடன் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது- என்றார். (ஒ- 02)

# 39 படகுகள் மீட்பு

மாங்குளம் - நத்தன்கண்டல் வனப் பிரதேசத்தில் பொதியிட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உரித்தானது எனக் கருதப்படும் 39 படகுகள் மீட்கப்பட்டுள்ளன. மாங்குளம் பொலிஸ் விசேட அதிரடிப் படை குழுவிற்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே நேற்றுமுன்தினம் இந்தப் படகுகள் மீட்கப்பட்டுள்ளன.

நத்தன்கண்டல் பிரதேசத்தில் அடர்ந்த காட்டில் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு பொதியிடப்பட்டிருந்த படகுகள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்தன என மாங்குளம் பொலிஸார் கூறியுள்ளனர்.

குறித்த படகுகள் மோதல் இடம்பெற்ற காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில்தாக்குதல்மேற்கொள்வதற்காகவே மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. (ஒ-10)

# அடேல் பாலசிங்கத்தின் தாய் காலமானார்

அமரர் அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியாரான அடேல் பாலசிங்கத்தின் தாயார் பிரித்தானியாவில் இயற்கைச் சாவடைந்துள்ளார்.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கால நிகழ்வுகளை, தனது அனுபவங்களை 'சுதந்திர வேட்கை' என்னும் தனது நூலில் எழுதி ஈழ வரலாறு தெரியாத பல மக்களுக்கும் தெரிய வைத்தவர் அடேல் பாலசிங்கம்.

# கிரிக்கெட் வெற்றி இராணுவத்துக்குச் சமர்ப்பணம் என்றால் தோல்வியைப் புலிகளுக்குச் சமர்ப்பிக்கப் போகின்றனரா?

## அரசின் கூற்றுக் குறித்து சரவணபவன் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஏப்.4

உலகக் கிண்ணக் கிரிக்கெட் வெற்றியை யுத்தத்தில் மரணித்த இராணுவதினருக்குச் சமர்ப்பணம் செய்வதாகக் கூறிய அரசின் ஐ.நா.பிரதிநிதி, தோல்வியைப் புலிகளுக்குச் சமர்ப்பிக்கப் போகின்றாரா? ஒரு விளையாட்டின் முக்கியத்துவத்தை உணராமல் பொறுப்பற்ற வகையில் நாட்டின் முக்கிய பதவி வகிக்கும் ஒருவர் இவ்வாறு பேசலாமா? எனக்கேள்வி எழுப்புகிறார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன்.

நேற்று மல்லாகத்தில் கணினியையும் தையல் இயந்திரங்களையும் சரவணபவன் எம்.பி. அன்பளிப்புச் செய்தார்.

மல்லாகத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிளை அலுவலகத்தில் கணினி, தையல் பயிற்சி நிலையங்களைக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவும் சரவணபவனும் கலந்து நாடாவை வெட்டி வைபவரீதியாகத் திறந்துவைத்தனர்.

இந் நிகழ்வில் மல்லாகம் மற்றும் காங்கேசன்துறைப் பிரதேச அமைப்பாளரும் பிரதேசசபை வேட்பாளர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் மேலும் கூறியவை வருமாறு:-

அன்று தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்காகப் படையினரால் அமைக்கப்பட்ட காவலரண்களைத் தகர்த்து அகற்றுவதற்கு நமது வரிப்பணமே செலவிடப்பட்டுள்ளது.

மல்லாகம் உட்பட இப் பிரதேசங்களில் கூட்டுறவு பண்டகசாலைகள் மற்றும் பாதைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இவை அன்றும் ஜனாதிபதியின் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் தொண்டர் அமைப்புக்களின் மூலமே யாழ். மாவட்ட செயலகத்தின் நேரடிக் கண்காணிப்பில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இவற்றை நான் இப்பொழுதே உங்களுக்குக் கூறிவைக்கிறேன். இந்த வேலைத் திட்டங்கள் முடிவடைந்ததும் எல்லாவற்றையும் தாமே செய்தோம் எனக் கூறிக்கொண்டு மாயைபோட்டுக் கொண்டு வருவார் அமைச்சர் டக்ளஸ். அதற்கு நீங்கள் ஒரு போதும் இடமளிக்கக் கூடாது.

இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் யாரால் எவ்வளவு செலவில் செய்யப்பட்டுள்ளன என்ற விவரம் என்னிடம் இருக்கிறது. அதைக் கொண்டுபோய் உங்கள் பிரதேச செயலாளரிடம் காட்டிக் கேளுங்கள் உண்மைகள் வெளிவரும்.

**கைப்பொம்மைகளாக அரச அதிகாரிகள் சிலர்**

இங்கு பிரதேச செலாளராக இருக்கும் ஒரு பெண் அதிகாரி டக்ளஸின் கைப்பொம்மையாகவே செயற்படுகிறார் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவர்கள் சிவில் அதிகாரிகள். நாளை நிர்வாக மாற்றம் ஏற்பட்டால் இவர்களுடைய நிலைமை என்னவாகும் என்று சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

**நிர்வாகத் திறமை கொண்டவர் புதிய துணைவேந்தர்**

இப்பொழுது யாழ். பல்கலைக்கழகத்துக்கு சிறந்த நிர்வாகத்திறமையுடைய பெண்மணியான வசந்தி அரசரட்ணம் துணைவேந்தராக வந்துள்ளார். இதற்கு முன் துணைவேந்தர்களாக வந்தவர்கள் பின்கதவு வழியாக வந்தவர்கள்.

எங்காவது தமக்கு மாலை விழும் எனத் தெரிந்தால் அவர்கள் எந்த மேடை என்றாலும் ஏறி விடுவார்கள். ஆனால், பேராசிரியை வசந்தி அரசரட்ணம் நேர் வழியில் வந்தவர்.

அவர் பதவியேற்றபின் பின் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மிகவும் தெளிவாகவும் துணிச்சலாகவும் பல விடயங்களைக் கூறி உள்ளார். அவர் நிச்சயமாக இம்மாவட்டத்தில் உள்ள பெண் நிர்வாக அதிகாரிகளுக்கு முன் உதாரணமாகத் திகழ்வார் என்று நம்புகின்றேன்.

இவருடைய காலத்தில் இராமநாதன் நுண்கலைப் பீடமும் சித்தவைத்திய பீடமும் புத்துயிர் அளிக்கப்பட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைத் துணைவேந்தர் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன் என்றும் சரவணபவன் எம்.பி. கூறினார்.

இந்தவைபவத்தைத்தொடர்ந்து சுன்னாகத்தில் அமைந்துள்ள கட்புலனற்றோர் பாதுகாப்பான 'வாழ்வகத்திற்கும்' விஜயம் செய்து அங்கு பாதுகாக்கப்படும் சிறார்களுடன் சிலமணிநேரம் உரையாடி, அவர்களுடனேயே ஒன்றாகப் போசனம் அருந்தினார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இந்த வாழ்வகத்தின் அபிவிருத்திக்காக தனது நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார் எனத் தெரிவித்தார். (ஒ-02)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் மாயையும்

எரிபொருள்கள் மூன்றினதும் விலைகள் மீண்டும் ஒருமுறை உயர்த்தப்பட்டுள்ளன. இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் பெற்றோல், மண்ணெண்ணெய் ஆகிய இரண்டினதும் விலைகள் லீற்றர் ஒன்றுக்கு பத்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளன. டீசலின் விலை லீற்றருக்கு மூன்று ரூபா உயர்த்தப்பட்டுள்ளது.

முன்னர் எல்லாம், அரசின் வருடாந்த வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் காலத்திலேயே பிரதான உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்கள் போன்ற ஏனைய முக்கிய பாவனைப் பொருள்களின் விலை உயர்வுகள் அறிவிக்கப்படுவது உண்டு.

கடந்த பல வருடங்களாக அந்த நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. திடீர் திடீரென இரவோடு இரவாக வெளியிடப்படும் அரச வர்த்தமானிகள் மூலம், பிரதான உணவுப் பொருள்கள் மற்றும் நாளாந்த பாவனைப் பொருள்களின் விலைகள் உயர்த்தப்படுவது சர்வசாதாரண வழக்கமாகி விட்டது.

எகிப்து, டுனிசியா, யேமன் மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகளில், அரபு தேசங்களில், அரசியல் நெருக்கடிகள் தோன்றியபோதே, பெற்றோலியப் பொருள்களான பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கு அவற்றின் மூலப் பொருளான மசகு எண்ணெய்க்கு பற்றாக்குறையும் அதன் விளைவான விலை உயர்வுகளும் உண்டாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அந்த விலை உயர்வுகளால் மக்களுக்குப் பாதிப்பு வராமல் புதிய உத்தி ஒன்றைக் கைக்கொள்வது குறித்து எமது நாட்டு அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக, அத்தரப்புகளிலிருந்து முன்னர் தகவல்கள் வெளிவந்தன.

மக்களின் பாவனைப் பொருள்கள் மற்றும் அரசு வழங்கும் சேவைகளின் விலைமட்டங்களை நிலையாக வைத்திருப்பது, அடிக்கடி விலை உயர்வுகளை நடைமுறைப்படுத்தாது இருப்பது, உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிக்கும்போது, இங்கும் உடனுக்குடன் அவற்றின் விலைகளை உயர்த்தாமல், ஏற்படும் நஷ்டங்களை வேறு வகைகளில் ஈடுசெய்வதே உத்தேச மாற்று யோசனை என்றும் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை உயர்வுகள் காரணமாக விதிக்கப்படக் கூடிய வரிகளை மக்களிடம் அறவிடாமல் இருப்பது என்பதும் அரசாங்கத்தின் உத்தேச மாற்று யோசனையாக இருந்தது. அந்த மாற்றுயோசனையும் உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி காண்பதற்கான அரசின் உத்திகளில் ஒன்றே. பொருளியல் நிபுணர்களும் இதனை புட்டுக்காட்டிருந்தனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்கு அமோக வெற்றி கிடைத்தாயிற்று. மக்களின் மிகமிகப் பெரும்பாலானோர் அரசாங்கத்தை, அதன் அபிவிருத்தித் திட்டங்களை, அதன் நடவடிக்கைகளைச் செயற்பாடுகளை ஆதரிக்கிறார்கள் என்று நாட்டுக்கும் உலகத்துக்கும் காண்பித்தாயிற்று.

இனி என்ன? அடுத்த தேர்தல் வரை மக்கள் நலன்களில் அக்கறை கொள்வதாகப் போலியாகத் தானும் காட்ட வேண்டிய தேவை உண்டு.

உலகச் சந்தையில் வாராந்தம், இல்லை இல்லை, நாளாந்தம் மசகு எண்ணெயின் விலை கிடுகிடு என உயர்ந்து வருகின்றது. கடந்த மாதம் 27 ஆம் திகதியன்று மட்டும் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 115' அமெரிக்க டொலர்களால் உயர்ந்தது என்பது பிந்திய தகவல்!

இத்தகைய ஒரு சூழ்நிலையில், உள்நாட்டில் பெற்றோலியம் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் வல்லமையோ, உபாயமோ அரசுக்கு இல்லை. அதன் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றாகி விட்டது.

அதனால், எரிபொருள் விலை உயர்வின் தாக்கத்தை மக்களின் மீது சுமத்தாமல் மாற்று வழியை நாடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அது உள்ளூராட்சித் தேர்தல் வெற்றியை இலக்கு வைத்த ஏய்க்காட்டும் பரப்புரை என்பதுதான் உருக்குலைக்க முடியாத உண்மை!

மேலும், உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் மக்கள் மூழ்கி இருந்த வேளை, அந்த மாயைக்குள் அளவுக்கு அதிகமாக நீந்த வைத்து, எரிபொருள்களின் விலைகளை அரசு உயர்த்தி உள்ளது. இப்போது தென்படும் உலகப் பொருளியல் நோக்கில், மசகு எண்ணெயின் விலைகள் எரிபொருள்களின் விலைகள், மேன்மேலும் ஏறுமுகமாகவே இருக்கப்போகின்றன.

அத்தகைய எண்ணெய் வர்த்தகச் சூழமைவில், இலங்கையின் எரிபொருள்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது கல்லிலே நார் உரிப்பதாகவே இருக்கும்.

இந்த உண்மையை மக்களுக்கு விலாவாரியாகத் தெரிவிக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு உண்டு. நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.3 சதவீதமாக உயர்ந்து வருவதாக படம் காட்டுவதால், மக்களுக்கு விமோசனமோ, நாட்டுக்கு பொருளாதார வளர்ச்சியோ, முன்னேற்றமோ கிட்டாது.

அரசின் சுய உயர்ச்சி நாடிய திட்டங்களையும் உயர்பீடங்களின் நலன் நாடிய செயல் முறைகளையும் தவிர்த்து, மக்களின் வாழ்க்கையை சீர்செய்வதற்குப் பொருத்தமான வழிமுறைகளை வகுப்பதன் மூலமே அவர்களுக்கு விமோசனம் வழங்கமுடியும்.

உலக மனித இயங்கியலில் எரிபொருள் இன்றி அமையாதனவாகி விட்டன. சகலதுறை வளர்ச்சியிலும், அபிவிருத்தியிலும் அதன் தேவை, பங்கு அதிகரித்து வருகிறது. வீட்டுப்பாவனை தொடக்கம், விவசாயம், கைத்தொழில் வரையான சகல துறைகளிலும் அது அத்தியாவசியமானதாகி உள்ளது. எமது நாட்டுக்கும் அது நூறுவீதம் பொருந்தும். ஆகையால் எரிபொருள்களைத் தவிர்த்து வளர்ச்சி, வளம் சேர்த்தல் என்பனவற்றை நினைத்துப்பார்க்கவும் முடியாது.

மேலும், எந்த நாட்டினதும் பொருளாதார வளர்ச்சியில், எல்லாத் தரப்புக்களினதும், ஆலோசனைகள் பெறப்பட்டு, ஒரே இலக்குடன் அரசு செயற்பட வேண்டும். தான் நினைத்த வழியில் நடந்தாலேயே உள்ளே உள்ள சூத்தைகளை மறைக்கலாம் என்ற போக்குடன் எந்த அரசு இயங்கினாலும் முடிவில் பாதிக்கப்படுபவர்கள் மக்களே.

மக்களின் வாழ்க்கைச் செலவை உச்சத்துக்கு உயர்த்திச்சென்றால் அவர்களின் வீட்டுப் பொருளாதாரம் குட்டிச் சுவராகும்; குன்றும்; நாட்டின் பொருளாதாரமும் மக்கள் வாழ்க்கை நிலையும் பாதாளத்துக்குக் கீழிறங்கிப் பஞ்சமும் பட்டினியுமே மிஞ்சும்.

இதனைக் கவனத்தில் கொண்டு அரசும், அதன் ஆசான்களும், அதிகாரிகளும் செயற்படும் காலம் பிறக்கவேண்டும். இதனைச் சிந்தையில் கொள்ளும் காலம் வந்தாலே நாடு முன்னோக்கி நகர இயலும். இல்லையேல் எல்லாம் வெறும் வாய்ச்சொல்லிலேயே நீறாகும்.

---

போர்க் குற்றங்கள்; இலங்கை முறையாக நடக்காவிடின்

# சர்வதேச பொறிமுறையை நிறுவும் அழுத்தம் அதிகரிக்கும் அபாயம்

**நேற்று 03-04-2011 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இது.**

எதிர்வரும் வெற்றித் திருநாளைக் கொண்டாடுவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் அதேவேளை போரை வெற்றி கொண்டு வடக்கு - கிழக்கை தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்த படைவீரர்கள் இப்போது வேறு விதமான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மரக்கறி விற்பனை, பயண பணிமனைகளை நடத்துதல், வீதித் திருத்த வேலைகள், அபிவிருத்திப்பணிகள், வீதித்திருத்தங்கள், இடங்களைப்பார்வையிட உதவுதல், உள்ளூர் விமாணப் பயணங்களை நடத்துவது, பொழுது போக்கு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்வது போன்றவை அவர்களுக்கு புதியதோர் பரிமாணத்தை வழங்கியுள்ளன. இதுவரை காலமும் தமது தொழிலுக்கு அப்பாற்பட்டவையாக இருந்து வந்த பணிகளில் இந்த நாட்டை விடுதலை செய்து தந்த முப்படையினரும் ஈடுபட்டுள்ளனர் என்றவாறு மக்கள் நினைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஆயுதப் படைகளுக்கான ஆள்சேர்ப்பும் தொடர்ந்து இடம் பெற்றே வருகின்றது.

**போர் தழும்புகள் இன்னும் மாறவில்லை**

இந்த விதமான பல மாற்றங்கள் படைதரப்பினரை மட்டுமன்றி தேசத்தின் தோற்றத்தையும் மாற்றி வருகின்றன. இதேசமயம் போரினால் ஏற்பட்ட சில தழும்புகள் இன்னமும் மாறாமலே இருக்கின்றன. அதே போல் தமிழர் நிதான நிலையில் இருந்த நிலைப்பாடு இராணுவ நிலைக்கு

## கிரிக்கெட் ஆரவாரத்துக்கு மத்தியில் எரிபொருள்களின் விலை அதிகரிப்பு

மாற்ற முற்றதற்கான காரணங்களும் மாற்றமுறாமல் இருந்து வருகின்றன. இருந்த போதிலும் ஒரு சமயம் விடுதலை புலிகளின் பிரதிநிதிகள் என்று வர்ணிக்கப்பட்ட தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் தற்பொழுது நாடாளுமன்றத்தில் ஒரே பெரிய தமிழ் கட்சி என்ற நிலையில் அரசு அதனுடன் பேச்சுக்களை ஆரம்பித்து அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.

எதுவானாலும் கடந்த வாரம் ஏற்பட்ட சில நிகழ்வுகள் மக்களையும் அரசையும் வேறு பக்கம் தம் கவனத்தைத் திருப்பும்படி செய்து விட்டன. கிரிக்கெட் ஜுரம் நாட்டை உலுக்கத் தொடங்கியதால் அநேகர் தமது சொந்தப் பிரச்சினைகளை மறக்க ஆரம்பித்து விட்டார்கள்.

**பெற்றோல், டீசல் விலை அதிகரிப்பு**

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட அரசாங்கம் பெற்றோலை லீற்றருக்கு பத்து ரூபாவாலும் டீசலை லீட்டருக்கு மூன்று ரூபாவாலும் அதிகரிக்க செய்து விட்டது. லிட்ரோ எரிவாயு மற்றும் லாக்ஃப் வாயுக்கள் ரூ. 238 ஆல் அதிகரிக்கச் செய்து மொத்த விலையை ரூ. 1890 ஆக கூட்டிவிட்டது. இந்த விலை அதிகரிப்பானது அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களின் விலைகளையும் சந்தையில் கணிசமாக அதிகரித்து விடும் என்று எதிர்பார்க்கலாம்:

உலகக் கோப்பை கிரிக்கெட் ஆட்டம் நேற்று முன்தினம் முடிவுற்ற நிலையில் அதன் அதிர்ச்சிதரும் பெறு

## ஒபாமாவின் கடும் தொனி செய்தியுடன் வருகிறார் பிளேக்

பேறுகள் மக்கள் மனங்களை எதிர்வரும் நாள்களில் பீடித்து ஆட்டுவதாய் இருக்கும்.

இந்த பின்புலத்தில் தான் இலங்கையில் போருக்கு முந்திய மற்றும் பிந்திய காலப் பகுதியில் நிகழ்ந்த சம்பவங்கள் தொடர்பான புயல் மேகங்களை வெளிநாட்டிலுள்ள தமிழ் அமைப்புகள் கிளப்பிவிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீ-மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையினை அவர்கள் எதிர்பார்த்து இருக்கின்றனர். அறிக்கை சமர்ப்பிப்பதற்கான அதிகாரப்பூர்வ கால வரையறை கடந்த 31 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது.

இலங்கை அரசாங்கத்தால் நிபுணர் குழுவின் அறிக்கையின் பிரதியொன்று தங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை பான் கீ- மூன் ஏற்றுக்கொள்ளவில்லையென்று தெரியவருகின்றது. அறிக்கையைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றிய தீர்மானத்தை எடுக்க முடியும் என்பதே அவரது நிலைப்பாடாக இருக்கிறது.

அதன்பிறகு மட்டுமே இலங்கைக்கு ஒரு பிரதியை வழங்கலாமா என்ற முடிவுக்கு செயலாளர் நாயகம் வருவார். அதுவரை அறிக்கை இரகசியமாகவே இருக்கும்.

ஏப்ரல் 13 ஆம் திகதிக்கும் 15 ஆம் திகதிக்கும் இடையில் நிபுணர் குழுவின் அறிக்கை செயலாளர் நாயகத்திடம் அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**மனித உரிமை சபைக்கு வரும் தீர்மானம்**

அறிக்கை இரகசியமாக இருக்கும் சமயத்திலேயே செயலாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பாரானால் ஜெனிவாவில் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் கவுன்சிலின் மாநாட்டில் ஒரு தீர்மான வடிவத்தில் அந்த நடவடிக்கை அமையலாம் என்று ராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. இந்த சபையின் அங்கீகாரத்துடன் செயலாளர் நாயகம் என்ன நடவடிக்கையை எடுப்பார் என்பது இத்தீர்மானத்தில் வெளிப்படுத்தப்படக் கூடும் என்கிறார்கள் அவர்கள். அப்படியான ஒரு நிலையில் பாதுகாப்புச் சபைக்கும் ஒரு விளக்கம் வழங்கப்படுவதாய் இருக்கும்.

இந்த விடயம் தொடர்பாக கடந்த வாரம் ஏற்பட்ட ஒரு முக்கிய திருப்பம் என்னவென்றால் தமிழர் தரப்பிலான ஒரு குழுவினர் அமெரிக்க ராஜாங்க அமைச்சில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி அமைச்சர் றொபேட் ஓ பிளேக்கை 75 நிமிடநேரம் வாஷிங்ரனில் சந்தித்து உரையாடியிருப்பதாகும்.

பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலக தமிழ் மன்றத்தின் தலைவர் வண. எஸ்.கே. இமானுவல், ஐக்கிய ராஜ்ய பணிப்பாளர் சுரேன் சுரேந்திரன், அமெரிக்க தமிழ் அரசியல் நடவடிக்கைகள் கவுன்சில் தலைவர் டாக்டர் எலியாஸ் ஜெயராஜா மற்றும் திருமதி கிரேஸ்வில்லியம்ஸ் என்ற இன்னொரு உறுப்பினர் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

ராஜாங்க உதவி அமைச்சர் பிளேக்கின் அனுசரணையுடன் மேற்படி தமிழ்க் குழுவினர் விடுத்த அறிக்கையில் அவர்கள் தெரிவித்திருந்ததாவது:

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் இப்போது அனுபவிக்கும் நிலைமைகளை குழுவினர் எடுத்து விளக்கினார்கள். தமிழ் மக்களின் பிரதான கவலைகள் அவைகளைத் தீர்ப்பதற்கான வழி முறைகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டன. தமிழர் தேசிய கூட்டமைப்புடனான அண்மைய கடிதத் தொடர்புகளும் இரு தரப்பாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இலங்கையில் அமுலில் இருக்கும் அவசரகாலச் சட்டம் அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுவரும் சங்கடங்கள் தொடர்பாகவும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது. இராணுவ நடவடிக்கைகளின் போதும் அதற்கு முன்னருமான சம்பவங்கள் பற்றிய அறிக்கையொன்றையும் அவர்கள் கையளித்துள்ளனர்.

**இலங்கைக்கு கடுமையான செய்தி**

அமெரிக்க ஒபாமா அரசின் கடுமையான செய்தியொன்றை இலங்கை அரசுக்கு வழங்குவதற்கு பிளேக் கொழும்புக்கு வரவிருக்கிறார் என்று தெரியவருகின்றது. இலங்கை எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளின் அவ

**தொகுப்பு: கோகுலன்**

சரமும் அவசியமும் பற்றி இலங்கை அரசுக்கு வலியுறுத்திக் கூறுவதற்காக தாம் இந்த மாதம் இலங்கைக்குச் செல்ல விருப்பதாக பிளேக் தமிழர் குழுவிடம் கூறியிருக்கிறார்.

உதவி அமைச்சர் பிளேக் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நியூயோர்க்கில் ஆஸியா

(14ஆம் பக்கம் பார்க்க)

## மண்டலாபிசேக பூர்த்தி விழாவும் சங்காபிஷேகமும்



புத்தூர் கிழக்கு வீரவாணி திருவருள்மிகு ஸ்ரீ நாச்சிமார் சப்த கன்னிகள் திருக்கோயில் மண்டல பூர்த்தி நவோத்திர சகஷ்திர சங்காபிஷேகப் பெருவிழாவும் சப்த கன்னிகள் திருவோசை மலர் வெளியீட்டு விழாவும் பங்குனித் திங்கள் 21ஆம் நாள் இன்று (04.04.2011) திங்கட்கிழமை இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு சப்த கன்னிகள் திருவோசை மலர் வெளியீட்டு விழா நடைபெறும். மாலை 6 மணிக்கு விசேட வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று, அம்பாள் திருவீதியுலாவரும் கண்கொள்ளாக் காட்சியை காணவாரீர்! சங்காபிஷேக பிரதம குரு சிவாகம கும்பாபிஷேக கிரியாதிலகம் சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள் நிருவத்தம்பை தான்தோன்றி விநாயகர் கோயில், ஊரிக்காடு.

சங்காபிஷேக உபயம்,
நா. நவரத்தினம் குடும்பம்,
ஆலய ஆதீனகர்த்தா.

(சி/577369) (35)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான விகிர்தி வருடம் பங்குனி மாதம் 21ஆம் நாள் (04.04.2011) திங்கட்கிழமை முற்பகல் 10.37 மணிமுதல் பிற்பகல் 12.31 மணி வரையுள்ள பூர்வ பட்ச பிரதமைத் திதி. ரேவதி நட்சத்திரம். சித்தயோகமும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

செல்வ புத்திரன்
திருநிறை செல்வன்
**கண்ணன்**
அவர்களுக்கும்
(ரமணன் கட்டப் பொருள் விற்பனை நிலைய உரிமையாளர்)



செல்வ புத்திரி
திருநிறை செல்வி
**நவாயினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு "ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில்" திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து. தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி கந்தசாமி
குடும்பத்தினர்
7/4. துரைராஜா வீதி.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

இரு வீட்டார்
அழைப்பு

திரு.திருமதி துரைராசா,
கோணாவளை,
கெருடாவில்,
தொண்டமானாறு.

(89-27)


## பிளேக் - தமிழர் சந்திப்பு; அதிர்ச்சியில் கொழும்பு!

கொழும்பு, ஏப். 04

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிரிவுக்கான உதவிச் செயலர் றொபேட் ஓ பிளேக்குடன் உலகத் தமிழர் பேரவை மற்றும் பிரிட்டிஷ் தமிழர் பேரவை ஆகியன நடத்திய சந்திப்பு இலங்கை அரசுக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்றுக்கு இலங்கை அரசைச் சம்மதிக்க வைப்பதற்கு அழுத்தம் கொடுக்க என்ன செய்யலாம் என்பது குறித்துக் கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என்று அரச அதிகாரிகள் நம்புகிறார்கள். இதுவே அரசின் கவலைக்குக் காரணம்.

கடந்த 28ஆம் திகதி உலகத் தமிழர் பேரவைத் தலைவர் வண. இமானுவெல் அடிகளார், பிரிட்டிஷ்தமிழர்பேரவையைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன், உலகத் தமிழர் பேரவையின் அமெரிக்க பிரிவைச் சேர்ந்த ஜெயராஜ் ஆகியோர் அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் றோபேட் ஓ பிளேக்கைச் சந்தித்துப்பேசியிருந் தனர்.

நான்காவது கட்ட ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக் கூறுவது தொடர் பாக ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா.பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளியாகவுள்ள நிலையில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருப்பதால், சிறிலங்கா அரசு கடும் அதிர்ச்சி யடைந்துள்ளது.


### பணிப்பெண் தேவை

வயது முதிர்ந்த பெற்றோரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்கப் பணிப்பெண் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு - 021 222 2594

### தவறிவிட்டது

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி ஆழ்வான் சின்னராசா என்னும் பெயர் முகவரியுடைய (580310419V) என்னும் இலக்கமுடைய தே.அ. அட்டை மற்றும் இராணுவ அடையாள அட்டை, காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பன நிலாவரைக்கும் சுன்னாகத்துக்குமிடையில் தவறிவிட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் T.P இலகத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும்.

தொடர்புகளுக்கு - 0773364987

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 7இல் செவ்வாய், கிரகபாவம் 56, சித்திரை 4ஆம் பாதம், வயது 30 உடைய உயர் பதவிவகிக்கும் மணமகளுக்குத் தகுதியான மணமகன் தேவை.

தொடர்பு - 0774609400

### பாராட்டி வாழ்த்துகிறோம்



**செல்வி மஹீசா சிவஞானம்**

கிளிநொச்சிக் கல்வி வலயம், பூநகரிக் கோட்டம் கிளி/ ஜெயபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி மஹீசா சிவஞானம் 9ஏ சித்தியினையும் மாவட்ட மட்டத்தில் 2 ஆம் நிலையினையும் பெற்றமைக்காக எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பாடசாலைச் சமூகம்.
(44-27-21) கிளி/ ஜெயபுரம் ம.வி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

HNB Assuranceஇல் பணிபுரியும் ஊழியர்கள் இன்று (04.04.2011) திங்கட்கிழமை Colombo Hilton Hotelஇல் இடம்பெறும் வருடாந்த விருதுவழங்கும் விழாவில் பதக்கங்களைப் பெறும் எமது நண்பர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.


Mr. M. Yogendiran
(Senior Advisor)
Super Gold Medal.


Mr. R. Sinthujan
(Asst. Field Manager)
Silver Medal


Mr. K. Sutharsan
(Group Leader)
Silver Medal


Mr. T. Mohanraj
(Group Leader)
Silver Medal


Mr. T. Vimal
(Senior Advisor)
Silver Medal


Mr. R. Anurajah
(Senior Advisor)
Silver Medal


Mr. K. Mayuran
(Team Leader)
Bronze Medal


Mr. P. Thineskumar
(Group Leader)
Bronze Medal


Mr. G. Vimalakanth
(Group Leader)
Bronze Medal

நண்பர்கள்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2213 திகதி 02 - 04 - 2011

ஆங்கில எழுத்திற்கும் D

வெற்றி எண்கள் 04 57 60 70

போனஸ் இல: 47

ஜக்பொட் பரிசு ரூ. 19,038,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 180457 | 20/- | 3,609,140/- |
| 2 இல | 12912 | 100/- | 1,291,200/- |
| 3 இல | 251 | 1,000/- | 251,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7065 | 40/- | 282,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 600 | 1,000/- | 600,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 19,038,950/- | - |
| 1 இல + போனஸ் இல | 8614 | 100/- | 861,400/- |
| 2 இல + போனஸ் இல | 415 | 500/- | 207,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 326 | 200/- | 65,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 14 | 1,500/- | 21,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,719,040/- |
| வெல்லபடாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 210682 | | 9,319,040/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| நுவரேலியா | 303036145-5-37 |
| யாழ்ப்பாணம் | 303035617-5-34 |
| குருநாகல் | 303033063-2-29 |
| மட்டக்களப்பு | 303039054-0-03 |
| பொலன்னறுவை | 303040665-8-38 |
| கேகாலை | 303045310-4-05 |
| கம்பஹா | 303052928-9-25 |
| கண்டி | 303049551-4-31 |
| வவுனியா | 303040716-0-15 |
| அநுராதபுரம் | 303039073-1-03 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ.19,531,350/-

புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

# கற்சிலைமடு விநாயகர் ஆலயத்தில் இராணுவ உயரதிகாரிகள் வழிபாடு

முல்லைத்தீவு, ஏப். 4

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கற்சிலைமடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் ஒட்டுசுட்டான் 64 ஆவது படைப்பிரிவின் இராணுவ உயர் அதிகாரிகளும் படைவீரர்களும் விசேட பூசை வழிபாட்டில் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ உயர் அதிகாரிகளான கேணல் பிரியந்த, பிரிகேடியர் பனன்வல, மேஜர் ரணசிங்க, கப்டன் உடுகல் பிட்டிய, கட்டன் மத நாயக்க ஆகியோர் ஆலயத்துக்கு வருகை தந்தபோது அறநெறிப் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் புடைசூழ மாலையிட்டு வரவேற்கப்பட்டனர்.

பின்னர் ஆலயக் குருக்கள் கீர்த்திவாச சர்மா தலைமையில் விசேட கிரியைகளும் பூசைகளும் நடத்தப்பட்டன.

அத்துடன் இராணுவ உயர் அதிகாரிகள் அனைவருக்கும் காளாஞ்சி கொடுக்கப்பட்டுஆலய பரிபாலன சபையினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவ அதிகாரிகளால் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் பாடநூல்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு வடக்கு சமாதான நீதிவானும் முன்னாள் பேராறு ப.நோ.கூ.சங்க முகாமையாளருமாகிய அ.குமாரசாமியின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது. ஆலய பரிபாலன சபைத் தலை வரும் ஓய்வுபெற்ற கிராம அலுவலருமாகிய மு.சிவநேசன் நன்றியுரை வழங்கினார்.(க-500)

# மேய்ச்சல் மாடுகள் களவாடப்பட்டு இறைச்சிக்கு வெட்டும் நிலைமை

கிளிநொச்சி, ஏப்.4

பூநகரி, செல்விபுரம் கிராமத்தில் மேய்ச்சல் தரவையில் கட்டப்பட்டிருந்த இரண்டு மாடுகள் கடந்த 29 ஆம் திகதியன்று இரவு களவாகக் கடத்தப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு ஒன்றும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நாம்பன் மாடு ஒன்றுமே இறைச்சிக்காகக் களவாக வெட்டப்பட்டுள்ளன.

இந்த இருமாடுகளும் பூநகரி, செல்விபுரத்தைச் சேர்ந்த செ.உருத்திரா என்பவருக்குரியது. இவர் அடுத்தநாள் காலை மேய்ச்சல் தரவைக்குச் சென்று பார்த்தபோது இரண்டு மாடுகளின் தலைகளும், தோலும் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக பூநகரிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

பொலிஸார் மாடுகளின் தலைகளையும் தோலையும் மேய்ச்சல் தரவையிலிருந்து எடுத்துச் சென்றுள்ளனர். மேலதிக விசாரணையும் ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவமானது மாடுகளை வளர்போர் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-406)

# 'வேல்ட் விஷன்' நிறுவனத்தின் உதவிகள்

அக்கராயன், ஏப். 4

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலய மாணவர்களுக்கு ''வேல்ட்விஷன்'' நிறுவனம் பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளது.

இந்தப் பாடசாலை இந்த ஆண்டு முதல் இயங்கத் தொடங்கியுள்ள போதிலும் மாணவர்களின் பௌதிகவளத் தேவைகள் நிறையவுள்ளன.

இந்த நிலையில் வேல்ட் விஷனின் உதவிகள் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது

(க-410)

## மாணவரின் முன் மாதிரி...



*தற்போதைய தேவை : கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலையில் மாணவர்களினால் உருவாக்கப்பட்ட மாதிரிச் சந்தையை'பாடசாலை முதல்வர் பார்வையிடுகின்றார். (410)*

# பங்குனிப் பொங்கல் பெருவிழா

கிளிநொச்சி, ஏப். 4

கிளிநொச்சி மாவட்டம் குஞ்சுப்பரந்தன் அருள்மிகு பொறிக் கடவை சிறி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனி பொங்கல் பெருவிழா மிகவும் சிறப்பாக இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த ஆலயத்தில் பக்தர்கள் காவடி, பறவைக்காவடி, கற்பூரச்சட்டி, பால்செம்பு, தூக் குக்காவடி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி அம்பாள் அருளைப் பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-406)

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 294 பேர் மீள்குடியமர்வு

## அரச அதிபர் தகவல்

முல்லைத்தீவு, ஏப். 4

வவுனியா மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 294 பேர் கடந்த சனிக்கிழமை மீள்குடியமர்ந்துள்ளதாக முல்லைத் தீவு அரச அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச பிரிவுக்கு உட்பட்ட மணவாளன் பட்ட முறிப்பு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களே கடந்த சனிக்கிழமை மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் மணவாளன் பட்ட முறிப்புப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும் படிப்படியாக மீள்குடியேற்றப்படவுள்ளதாக முல்லைத்தீவு அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(க-எ)

# புனரமைக்கப்படும் ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம்

கிளிநொச்சி, ஏப். 4

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் முருகன் ஆலயம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த போர்க்காலத்தில் பெரும் அழிவுகளைச் சந்தித்த இந்த ஆலயம் தற்போதுதான் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மேற்குப் பகுதியில் முக்கியமான ஆலயமாக இந்த ஆலயம் விளங்குவது குறிப்பிடத்தக்கது. (க-410)

# அடிப்படை வசதிகளில்லாத பேராறு தமிழ் வித்தியாலயம்

முல்லைத்தீவு, ஏப்.4

பேராறு தமிழ் வித்தியாலயம் நிரந்தரமான கட்டடம் இன்றியும் ஆசிரியர் பற்றாக்குறையுடனும் அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது எனப் பாடசாலை அதிபர் சற்குணசீலன் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலை துரித கதியில் வளர்ந்து வருகின்றது. ஆனால், இதற்கான கட்டட வசதிகளோ அல்லது ஆசிரியர் வளமோ இல்லை. அதுமட்டுமின்றி போதிய தளபாட வசதிகளோ அல்லது கழிப்பறை வசதிகளோ இல்லாததால் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இது தொடர்பாக வலயக் கல்விப் பணிமனைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ளமாணவர்கள்திறமை வாய்ந்தவர்கள். இவர்களை மேன் மேலும் வளர்த்தெடுக்க வேண்டுமாயின் வசதிகள் அனைத்தும் பூர்த்திசெய்துதரப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

# கிளிநொச்சியில் 2 நெற்களஞ்சியங்கள் நெல் சந்தைப்படுத்தல் சபை திறந்து வைப்பு

கிளிநொச்சியில் மீளவும் புனரமைக்கப்பட்ட இரண்டு நெற்களஞ்சியங்களைக் கூட்டுறவு உள்ளூராட்சி வர்த்தக அமைச்சின் ஜோன்சன் பெர்ணாண்டோ கடந்த புதன்கிழமை திறந்து வைத்தார்.

யுத்த அனர்த்தங்களால் முற்றாக அழிவடைந்த இந்த நெற்களஞ்சியங்கள் தற்போது மீளவும் புனரமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று கிளிநொச்சி நகரிலும் மற்றையது வட்டக்கச்சியிலும் அமைந்துள்ளன.

இவை நெல் சந்தைப்படுத்தல் சபைக்குரியனவாகும். இவையே கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் நெல் சந்தைப் படுத்தல் சபையின் தலைவர் கே.பி. ஜயசிங்க, போரூட் நிறுவன அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வன்னியில் யுத்தத்தின் பின்னர் நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியங்கள் இல்லாததால் நெல்லை விற்பனை செய்வதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

தற்போது இந்த நெற் களஞ்சியங்கள் திறந்து வைக்கப்பட்டதன் மூலம் தாம் விளைவிக்கும் நெல்லை விரைவாக நியாய விலையில் விற்பனை செய்யலாமென விவசாயிகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (க)

# கோட்ட மெய்வன்மைப் போட்டி

மன்னார் மாவட்டம் மடு கல்வி வலயத்தின் மாந்தை மேற்கு கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 6ஆம்,7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக மாந்தை மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் மு.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

அடம்பன் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பி.பிரபாகரமூர்த்தி கலந்து கொள்வார். (க-410)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் கிளிநொச்சியில் முழுவீச்சில்

கிளிநொச்சி,ஏப்.4

கிளிநொச்சியில் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருவதாகத் தெரிய வருகின்றது.

யுத்தத்தின் பின்னர் மக்கள் இந்தப் பிரதேசத்தில் அதிகளவில் மீளக்குடியமர்ந்துள்ளனர். அத்துடன் பல இடங்கள் இன்னமும் பற்றைக் காடுகளாகவே காட்சியளிக்கின்றன.

அத்துடன் தாழ்வான பகுதிகளில் இன்னமும் வெள்ளநீர் காணப்படுகின்றது.

இது டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்கு உகந்த இடங்களாகும். இவற்றைப் பெருக விடுவதனால் டெங்குநோய் பரவும் ஆபத்து உண்டு.

இவற்றைக் கருத்திற் கொண்டு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் இந்த டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் பாடசாலை, பொது இடங்கள், வீதிகள், திணைக்களங்கள் எனப் பல்வேறு இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்கள் சிரமதானப் பணிகள் மூலம் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

## VACANCIES

1) விற்பனைப் பிரதிநிதி (D.S.R) (பீனிக்ஸ் பிளாஸ்ரிக் கம்பனிக்கு சாரதி அனுமதிப் பத்திரத்துடன் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்
2) கணினி இயக்கத் தெரிந்தவர் (பெண், சாவகச்சேரியில் வசிப்பவர் விரும்பத்தக்கது)

தொடர்பு: யாழ்.றெக்ஸ், இல.13/A, நவீனசந்தை, சாவகச்சேரி

## காணி விற்பனைக்கு

தென்மராட்சி, கொடிகாமம், கச்சாய் றோட், கச்சாய் அரசினர் பாடசாலைக்கு அருகில் எதிர்கால முதலீட்டுத் திட்டத்துக்கு ஏற்ற காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க.
0750476078, 0772021691, 0247911178

## ஆசிரியர் தேவை

பிரபல ஆங்கில மொழிமூல தனியார் பாலர் பாடசாலைக்கு நல்லூர், அச்சுவேலி, சாவகச்சேரி , பருத்தித்துறை ஆகிய இடங்களில் கடமையாற்றக்கூடிய ஆசிரியர்கள் தேவை 05.04.2011 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்குத் தகுதிச் சான்றிதழ்களுடன் நேர் முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.

140,கோயில் வீதி, நல்லூர்.

## வலி.மேற்கில் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.04

வலி. மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாலு தலைமையில் நடைபெறும் விழாவில், யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி ஏ.எஸ். ஜே.ரூபசிங்கம் சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி , ஓய்வு பெற்ற நிர்வாக கிராம அலுவலர் ஆ .சபாநாதன், மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ)

## அலுவலகத்துக்கு வீடு தேவை

யாழ். நகரில் இருந்து இரண்டு கிலோ மீற்றர் சுற்று வட்டத்தில் அலுவலகப் பாவனைக்கு உடன் வீடு தேவை.
விவரங்களுக்கு
தொடர்பு: 0716362362

## கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் பட்டய உறுப்பினர்
**லயன் S.K. நடராஜா**
அவர்களின் பாசமிகு துணைவியார்



**திருமதி கனகம்மா நடராஜா**

அவர்களின் திடீர் மறைவினால் துயற்றிருக்கும் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய் பரீஸ் லயன்ஸ் கழகம்,
மானிப்பாய்

## JOB ANNOUNCEMENT

MEDECINS SANS FRONTIERES

**Médecins Sans Frontières (MSF-France)**
**Job Vacancy for**

## PHARMACY STOREKEEPER POINT PEDRO, JAFFNA OFFICE

**Médecins Sans Frontières France (MSF-F) is an international humanitarian non-governmental Organization (NGO) acting in the health sector.**

MSF-France is working in close collaboration with the Ministry of Health, providing medical care and support in Jaffna and Mullaitivu Districts. In response to the need for medical assistance in regions highly affected by the war, MSF-F is currently helping to strengthen secondary health care services in Mullaittivu and Point Pedro Hospitals in the areas of Emergency Unit care, Surgical Care and, Gynecologic and Obstetric care.

**Médecins Sans Frontières (MSF-France) is looking for the following position to be filled:**

**PHARMACY STOREKEEPER**

### MAIN RESPONSIBILITIES

*To provide quality management of pharmacy inventory*

- Ensure proper documentation of pharmacy inventory through strict stock card keeping and routine physical inventory counts, including keeping strict record of expiry & stock ruptures.
- Enter all pharmacy information into Isystock, the software used by MSF to manage pharmacy inventory
- Conduct full pharmacy inventory on a regular basis (every 3 months)
- Manage pharmacy by arranging drugs consistent with MSF procedures, classifications and expiry dates

*To manage pharmacy orders and supply*

- Manage all stock, orders, deliveries and donations of MSF medical items and equipment, respecting MSF policies and procedures at all times.
- Coordinate pharmacy purchase orders with Colombo pharmacy staff
- Ensure complete reception of pharmacy purchases
- Coordinate receipt of shipments (packing lists, cold chain requirements, etc.) with assistance from logistics department

### *MAIN QUALIFICATIONS*

**Required:**

- Store keeping experience, ideally in a pharmacy or medical supplies environment
- Medical profile preferred (nurse/pharmacist assistant, etc.)
- Fluency in English and Tamil (spoken, read and written)
- Extensive computer experience and ability to learn new software programs and work independently
- Flexibility, willingness to learn, and work within a team
- Respect of MSF organization and principles Highly desirable
- Previous experience as a pharmacy storekeeper
- Knowledge of pharmacy and medical supplies
- Previous experience with MSF or with an international NGO

**Interested person shall send the application with updated CV, motivation letter, qualifications and references to: MSF-France Administrator, Msf France, Othiyady, Puloly, Point Pedro, Jaffna** or **E-mail:** msff-point-pedro@paris.msf.org Before, April' 11th 2011

Only candidates selected for interviews will be contacted

## ஆன்றோரின் தெரிவில்

**மாகாணத்தின் முன்னணி நிறுவனத்தில்**

# O/L DAY CLASS

**ஆரம்பமாகி நடைபெறுகின்றது**

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றன

**The Express Institute**
Irupalai, Kopay. -அதிபர்

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**சுப்பையா கனேசு**

திதி: பூர்வபட்ஷ பிரதமை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14-02-1943 | 07-04-2008 |

அன்பின் தத்துவத்தை ஆதாரமாய்ச் சொல்லி
பண்பின் சிகரங்களாய் தரணியில் வாழவைத்த
பொறுமையின் உறைவிட புண்ணியவாளன்
ஆண்டு மூன்று அவதியில் உருண்டிடினும்
அகிலத்தில் வாழும் வரை அப்பாவின்
நினைவுடன்....

குடும்பத்தினர்,
டச் றோட், மானிப்பாய்.

(2955)

# சிங்கப்பூர் அரசு வழங்கும்

**Study in SINGAPORE**

# 80% புலமைப்பரிசில்கள்



**80% Tuition Grant***
Subsidised school fees are available to eligible candidates

**Higher Education @ Govt. Polytechnic**

**Join Us in the 2012 April Intake. Apply with Your GCE 'O' or 'A' Level Results**
**Minimum : English - A. Maths & Science - B and any 2 C's**

- ✓ Environmental Science ✓ Materials Science ✓ Business Applications
- ✓ IT Service Management ✓ Industrial & Operations Management ✓ Business Information System
- ✓ Information Technology ✓ Supply Chain Management ✓ Common Engineering

• Allowed to work 16 hours (Part-time) • In campus hostel accommodation

>>>> தமிழில் தொடர்புகளுக்கு :

## MILLENNIUM CONCEPTS

**225-3/2, Galle Road, Colombo-04.** (Adjoining VISAKA Road, Bambalapitiya.)

**011 2552 765 | 0773 40 50 60 | 0714 90 49 49**

Web : www.studysingapore.lk E-mail : rp@studysingapore.lk

singapore education

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1282 சிகப்பு

கடகம் 02 28 33 37 01-04-2011

ஜக்போட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 251,410 | 20/- | 5,028,200/- |
| 2 இலக்கங்கள் | 23,011 | 40/- | 920,440/- |
| 1 இல. + லக்கினம் | 22,735 | 60/- | 1,364,100/- |
| 2 இல. + லக்கினம் | 2,131 | 200/- | 426,200/- |
| 3 இலக்கங்கள் | 613 | 1000/- | 613,000/- |
| 3 இல. + லக்கினம் | 63 | 10,000/- | 630,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,581,940/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 667 | | 632,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 300,633 | | 10,213,940/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,122,350/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 07 08 15 20

ஜக்போட் பரிசு ரூபா. 400,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 664 | 500/- | 332,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 400,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 667 | | 632,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்போட் ரூபா. 500,000/-

# அப்பாவிகளுக்காக விதைக்கப்படும் அபாய வித்துக்கள்

## உலக மிதிவெடி அபாய தினம் இன்றாகும்

கண்ணி வெடிகள் எதிரிகளை இலக்கு வைத்து அவர்களை அழிக்க புதைக்கப்படும் ஆபத்து விதைகள் என்பது வெளிப்படையாக பலர் அறிந்த விடயம்.

ஆனால் அவை அப்பாவிகளுக்காகவும் விதைக்கப்படும் அபாய வித்துக்கள் என்பதே உண்மை.

இன்று உலகளாவிய ரீதியில் உயிர்களின் இருப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கும் ஒரு விடயமாக கண்ணி வெடிகளும் வெடிக்காத வெடி பொருள்களும் உருப்பெற்றுள்ளன. இது யாராலும் மறுப்பதற்கில்லை.

பொதுவாக யுத்தத்தின்போது எதிரிகளை முன்னேறவிடாமல் தடுப்பதற்கும் எல்லைப்புற பாதுகாப்புக் காகவும் கண்ணிவெடிகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

ஆனால் ஒரு குறித்த தேவைக்காக இவ்வாறு பயன்படுத்தப்படும் இந்த வெடிப்பொருள் யுத்தம் முடிந்த பின்னரும் பல அப்பாவி உயிர்களைக் காவுக் கொள்கின்றது.

அதேவேளை பலரை விசேட தேவையுடையவர்களாக மாற்றியுள்ளமையும் வேதனையளிப்பதாகவே உள்ளது.

யுத்த எச்சங்களாகக் காணப்படும் இந்தக் கண்ணி வெடிகள் முறையாக அகற்றப்படாமை மற்றும் இதன் அபாயம் தொடர்பாக மக்களிடையே போதியளவு விழிப்புணர்வு இன்மை போன்ற காரணங்கள் இழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் தாமதத்துக்கும் காரணிகளாக அமைகின்றன.

அப்பாவி மக்களின் உயிர்களுக்கு வேட்டு வைக்கும் இந்த கண்ணி வெடி அபாயம் குறித்து அனைத்துலக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியம்

உலகிலுள்ள 68 நாடுகளில் யுத்தம் காரணமாக 110 மில்லியன் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன். இவற்றை முற்றாக அகற்றுவதற்கு 1100 வருடங்கள் தேவைப்படும் என்று கூறப்படுகின்றது.

600 வகையான கண்ணி வெடிகள் உலகெங்கும் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றன. தனிநபருக்கு எதிரான கண்ணி வெடிகளும் தாங்கிகளுக்கெதிரான கண்ணி வெடிகளுமே யுத்தத்தின் போது பயன்படுத்தப்பட்டுள்ளன.

கண்ணிவெடி பாவனையானது இன்று நேற்று உருவானதொன்றல்ல. கி.மு.52 ஆம் ஆண்டில் யுலியஜ்சீசர் தமது எதிரிப் படைகளை அழிப்பதற்காக அவர்கள் பயணிக்கக்கூடிய இடங்களில் உருக்கிலாலான முட்கள் கொண்ட பொருள்களை புதைத்ததாக வரலாறு எடுத்தியம்புகின்றது.

இதுவே உலகில் முதன் முதலாக பயன்படுத் தப்பட்ட கண்ணி வெடியாக நம்பப்படுகின்றது.

இதனைத்தொடர்ந்து பெரிய அழிவைத் தரக்கூடிய கண்ண வெடிகள் முதலாம் உலக போரின் போது பாவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு நாசகார செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் இந்த கண்ணி வெடியொன்றை உருவாக்குவதற்கு மூன்று டொலர்கள் மாத்திரமே செலவாகின்றது. ஏனினும் கண்ணிவெடியை அகற்றுவதற்கு ஆயிரம் டொலர்கள் செலவாவதாக கூறப்படுகின்றது.

இதேவேளை வருடாந்தம் ஆயிரம் பேர் கண்ணி வெடியால் பாதிக்கப்படுகின்றனர். கண்ணி வெடியால் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக்கொள்வதும் அதன் பாவனையை தடை செய்வதும் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவியளிப்பதும் இன்று உலக நாடுகளுக்குள்ள பெரும் சவாலாக உள்ளது.

குறிப்பாக இலங்கையை எடுத்துக் கொண்டால் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் துரிதமாக மீள்குடியமர்த்தும் நடவடிக்கைக்கு கண்ணி வெடி பெரிய சவாலாக விளங்குகின்றது.

**இலங்கையில் மனிதாபிமான கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கை**

இதேவேளை, அரசின் மீளகுடியமர்வுத் திட்டத்துக்கமைய முதன்மை அடிப்படையில் மக்களை மீளக் குடியமர்த்தும் இடங்கள் அவர்களின் வாழ்வாதாரங்களை மேற்கொள்ளும் இடங்கள் உட்கட்டமைப்புகளை மேற்கொள்ளும் இடங்கள் இடைக்கால மற்றும் குறைந்தளவு முன்னுரிமையுள்ள இடங்கள் என்ற அடிப்படையில் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்குச் சவாலாக உள்ள இந்த கண்ணி வெடியகற்றும் பணிகளை முன்னெடுப்பதற்கு இவர்கள் பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாகக் சுட்டிக்காட்டுகின்றனர்.

காலநிலை , கண்ணி வெடிகள் புதைக்கப்பட்ட இடங்கள் குறித்த போதிய தகவல்கள் இல்லாமை வளப் பற்றாக்குறை மற்றும் பல்வேறு வடிவங்களிலானான கண்ணி வெடிகள் போன்ற காரணிகள் கண்ணி வெடியகற்றும் பணிகளில் தாமதத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைகின்றன.

**கண்ணி வெடி அபாய கல்வி**

இதேவேளை கண்ணி வெடியால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் மற்றும் இழப்புகளை தவிர்த்துக்கொள்ளும் முகமாக கண்ணி வெடி தொடர்பான அபாய கல்வியை இடம்பெயர்ந்தவர்களுக்கும் மீளக் குடியமர்த்தப்படும் மக்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யுனிசெவ் அமைப்பின் உதவியுடன் சர்வோதய அமைப்பு மற்றும் சமூக நம்பிக்கை நிதியமான சொண்ட் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்கள் முன்னெடுத்து வருகின்றன.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளித்தல்**

கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவரின் மருத்துவ பராமரிப்பு தேவைகள் மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமான ஒன்று.

கண்ணி வெடியால் ஏற்படும் இத்தகைய இழப்பு பாதிக்கப்பட்டவரை மாத்திரமன்று ஒட்டு மொத்த குடும்பத்தையும் பாதிக்கும் விடயமாக கருதப்படுகின்றது.

ஆகவே பாதிக்கப்பட்டவருக்கு வைத்தியசாலைக்கு முன்னரான பராமரிப்பு வைத்தியசாலைப் பராமரிப்பு புனர்வாழ்வு சமூக பொருளாதார ஒருங்கிணைப்பு விசேடமாக சிறுவர்களுக்கு மீள அவர்களின் கல்வியை பெற்றுக்கொடுப்பது போன்றன குறித்து அதிக அக்கறை எடுத்துக்கொள்வது அவசியமாகும்.

**கண்ணிவெடி பாவனைக்கு எதிரான ஒட்டாவா உடன்படிக்கை**

கண்ணி வெடியின் ஆபத்தை உணர்ந்து அதனை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை 1992 ஆம் ஆண்டு கனடா அரசு தீவிரமாக முன்வைத்தது.

அதனை தொடர்ந்து 1997ஆம் ஆண்டு கண்ணி வெடிபாவனைக்கு எதிராக ஒட்டாவா உடன்படிக்கையில் 133 நாடுகள் கைச்சாத்திட்டன.

இந்த உடன்படிக்கை 1999ஆம் ஆண்டு மார்ச் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டது. தற் போது 156 நாடுகள் இந்த உடன்படிக்கையில் கைச் சாத்திட்டுள்ளன. அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இந்தியா, இலங்கை, கியூபா, பாக்கிஸ்தான் உட்பட 37 நாடுகள் இதுவரை இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லையென கூறப்படுகின்றது.

இதேவேளை, 64 நாடுகள் பயிற்றுவிப்புக்காகவும், தற்பாதுகாப்புக்காகவும் இதைப் பயன்படுத்துவோம் என்ற அடிப்படையில் கைச்சாத்திட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாடுகள் கண்ணி வெடி பாவனை, களஞ்சியப்படுத்தல், உற்பத்தி செய்தல், கொண்டு செல்லல், விற்பனை செய்தல் என்பவற்றை தவிர்த்துக் கொள்ளல். அழிவை ஏற்படுத்தக்கூடிய கண்ணி வெடிகளை உலகிலிருந்து இல்லாதொழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல் என்பன தொடர்பாக அதிக கவனம் செலுத்தி வருகின்றன.

இதேவேளை இந்த உடன்படிக்கையின் மூலம் இந்த பிரச்சினையை தவிர்ப்பதற்காக மனிதபிமான கண்ணி வெடிச் செயற்பாடொன்று முன்னெடுக்கப்படுகின்றது. அதில் இந்த அம்சங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்த உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளை ஏற்று பல நாடுகள் இதில் கைச்சாத்திடாமல் இருப்பதும் கண்ணி வெடி குறித்த அபாயத்தை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

ஆகவே, இந்த நாடுகளை உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தூண்டுதல் இங்குள்ள பெரும் சவாலாக இருப்பதாக வலியுறுத்தப்படுகின்றது.

அதேபோல் மக்களுக்கு கண்ணி வெடி அபாய கல்வியை வழங்குதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளித்தல் என்பவற்றை முறையாக மேற்கொள்வதன் மூலமே இந்த பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

**சயூரராஜன்**

கண்ணி வெடி அபாயம் கல்வியை மக்களிடையே எடுத்துச் சென்று அவர்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகளில் ஊடகங்களும் பங்களிப்பு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது.

கண்ணி வெடிகள் அற்ற உலகை உருவாக்குவதற்கு ஒவ்வொரு தரப்பினரும் பொறுப்புணர்ந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அதன் மூலமே கண்ணி வெடி தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கண்ணி வெடிக்கெதிரான செயற்பாடுகளுக்கு உதவுகின்றன.

# இந்திய மீனவர் அத்துமீறல் கற்பிட்டி கடலுக்கும் பரவியது

வடபகுதிக் கடலில் இதுவரை அத்து மீறி வந்த இந்திய மீனவர்கள் இப்போது வடமேற்குக் கடற்பகுதியான கற்பிட்டி கடற்பகுதிக்குள் ஊடுருவி மீன்பிடிக்க ஆரம்பித்துள்ளனர். இதனால் சிங்கள மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது அங்கு பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

வடக்குக் கடலில் இந்திய மீனவர்கள் கரைவரை ஊடுருவி அத்துமீறி நீண்ட காலமாக தொழில் செய்து வருகின்றனர். இதற்கு எதிராக வடக்கு மீனவர்கள் போர்க்கொடி தூக்கியிருந்தனர்.

இதுதொடர்பாக இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. கடந்த மாத இறுதியில் புதுடில்லியில் நடைபெற்ற உயர் மட்ட கூட்டத்தில் இந்தப் பிரச்சினை ஆராயப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வடக்கு மேற்குக் கரைப் பிரதேசமான கற்பிட்டி கடற்பகுதிக்குள் கடந்த சில நாள்களாக இந்திய மீனவர்கள் ஊடுருவி மீன்பிடிப்பதால் அப்பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது. இந்திய ட்ரோலர்களின் ஆக்கிரமிப்பை அடுத்து அந்தக் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபடும் சிங்கள மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் திரும்பினர்.

இந்திய மீனவர்களின் இந்த அத்து மீறலுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை போராட்டம் நடத்த இருப்பதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். எத்தகைய போராட்டம் என்பதை மீனவர்கள் வெளியிடவில்லை. (உ-ஐ)

# ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் ரத்தாகும் சாத்தியம்

கொழும்பு, ஏப்.4

ஒத்திவைக்கப்பட்ட 66 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை மே 31 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தாவிட்டால், அந்தத் தேர்தல் ரத்தாகும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. புதிதாக நியமனப் பத்திரம் கோரியே தேர்தல் நடத்தவேண்டிய நிலை ஏற்படும் எனவும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாலும் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதாலும் 66 உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்களை தேர்தல் ஆணையாளர் ஒத்திவைத்திருந்தார்.

நீதிமன்றத் தீர்ப்பு வந்தபின்பு இந்தச் சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. ஆனால் நீதிமன்றத் தீர்ப்பு இன்னும் வெளியாகவில்லை.

மே 31 ஆம் திகதிக்கு முன் இத் தேர்தல்கள் நடத்தப்படாவிட்டால், 2009 ஆம் ஆண்டு தேர்தல் வாக்காளர் இடாப்புக்குப் பதிலாக 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புப் படியே தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(உ-ஐ)

# காணாமல்போன கடற்படையினர் வெளிநாட்டுக்குத் தப்பியிருக்கலாம்

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த 29 ஆம் திகதி காணமாற்போன நான்கு கடற்படையினரும் வெளிநாட்டில் அகதி அந்தஸ்து கோருவதற்காக கடல் வழியாகத் தப்பிச்சென்றிருக்கலாம் என கடற்படை சந்தேகம் வெளியிட்டுள்ளது. இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் இந்தியக் கடலோரக் காவற்படையினரின் உதவியுடன் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டிருந்தனர். எனினும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் பயணம் செய்த படகு உடுத்துறையில் கரையொதுங்கி இருந்தது. படகில் இருந்த படையினர் நால்வரும் வெளிநாட்டில் அகதி அந்தஸ்து பெறுவதற்காக, கடலில் வேறொரு படகில் தப்பிச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது எனக் கடற் படையினர் தெரிவித்தனர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.03.2011 சனிக்கிழமை
அன்று சிவபதம் அடைந்த எமது
குடும்பத் தலைவர்

**அமரர்**
**சுப்பையா சுப்பிரமணியம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (04.04.2011) திங்கட்கிழமை மு.பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
மீசாலை கிழக்கு,
மீசாலை.

"கஜன் றேடர்ஸ்",
தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரி. (49-21-23)

## சமய சந்நிதிகளில்

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் 18 ஆம் திகதி ஊறணி தீர்த்தக் கடலில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(ற-253)

***

வடமராட்சி, ஏப். 4

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்த கும்பாபிஷேக தின நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு சங்குப் பூஜையும் 10 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகமும், 11 மணிக்கு சண்முகா அர்ச்சனையும், 12 மணிக்கு விசேட உற்சவமும் இடம்பெற்று சுவாமி வீதி உலா வருவார்.

(ம-236)

***

யாழ்ப்பாணம், ஏப். 4

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ம-313)

## German Institute

German Swiss மொழிகள் தமிழ்மொழி பெயர்ப்புடன் German Embassyயால் கேட்கப்படும்.
A1 Examக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
10, Palaly Road, Jaffna. T.P 0771604823

## நோர்த்சீ லிமிட்டெட்
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

### வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்கள்

யாழ்.குருநகரில் இயங்கிவரும் வலைத் தொழிற்சாலையில் பணிபுரிவதற்காக பின்வரும் வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**1.வாகன ஓட்டுநர் (Driver)**

**கல்வித் தகைமை :** கல்விப் பொதுத்தராதர சாதாரண தரக் கல்வி பெற்றவராகவும். A தர வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உடையவராகவும் இருந்தல் வேண்டும்.

**வேலை அனுபவம் :** குறைந்தது 5 வருடங்கள் வாகனம் செலுத்திய அனுபவமுள்ளவராக இருத்தல் வேண்டும். சிங்களம் பேசத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கொழும்பு மற்றும் நாட்டின் இதர மாவட்டங்களிலும் வாகனம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**வயது எல்லை :** விண்ணப்பத் திகதியன்று 40 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சம்பள அளவுத்திட்டம் மற்றும் நியமனம் குறித்து நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளப்படும்.

**2. விற்பனை அலுவலர் (Sales Officer)**

**கல்வித் தகைமை :** கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் தேர்ச்சி பெற்று இருந்தல்வேண்டும்.

**வேலை அனுபவம் :** இத்துறையில் குறைந்தது 3 வருடங்கள் அனுபவம் பெற்றிருப்பதுடன், வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல்வேண்டும்.

**வயது எல்லை :** 22-30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
சம்பளத்திட்டம் மற்றும் நியமனம் குறித்து நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளப்படும்

மேற்படி வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தங்களது சுயவிவரக்கோவை மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட கல்வித் தரச்சான்றுகளுடன் குருநகரில் அமைந்துள்ள நோர்த்சீ லிமிட்டெட்டின் தலைமை அலுவலகத்தில் 05/04/2011 அன்று மு.ப.10 மணி முதல் 12.30 மணி வரை இடம்பெறவுள்ள நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்குமாறு கேட்டு கொள்ளப்படுகின்றீர்கள்.

பிரதி பொது முகாமையாளர், நோர்த்சீ லிமிட்டெட்,
வலைத் தொழிற்சாலை, குருநகர் யாழ்ப்பாணம். (48,23,24)

## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

2011.04.01

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2377

வெற்றி எழுத்து: U
வெற்றி எண்கள்: 2 3 3 0 3 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | U | 2 | 3 | 3 | 0 | 3 | 7 | ரூபா.10,000,000/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 2 | 3 | 3 | 0 | 3 | 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 02 |
| 2 பரிசுகள் | | | 3 | 3 | 0 | 3 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 3 | 0 | 3 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 139 |
| 4 பரிசுகள் | | | | | 0 | 3 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1365 |
| 5 பரிசுகள் | | | | | | 3 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் 13691 |
| 6 பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 135637 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 2 | 3 | 3 | 0 | 3 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | | 2 | 3 | 3 | 0 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 140 |
| 9 பரிசுகள் | | 2 | 3 | 3 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1372 |
| 10 பரிசுகள் | | 2 | 3 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13604 |
| 11 பரிசுகள் | U | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 54128 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 14,216,800.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)

**க.பொ.த (உ/த) மாணவர் அனுமதி - 2013**

கணித, விஞ்ஞான, வர்த்தக மற்றும் கலை வகுப்புகளுக்கான அனுமதி 08.04.2011 வரை ஏற்றுக்கொள்ளப்படும். இதற்கான படிவத்தை அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்கவும்.
குறிப்பு: கணித, விஞ்ஞான வகுப்புகளில் அனுமதி பெறும் திறமையுள்ள மாணவர்களுக்கு பாடசாலை நூற்றாண்டை முன்னிட்டு 2 வருடங்களுக்குமான புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

அதிபர்

## கோலாகலத் திறப்பு விழா



**ஹீரோ, கென்டன் காட்சியறை**



இன்று (04.04.2011) திங்கட்கிழமை
பி.ப. 4 மணியளவில்
யாழ்.மாநகரசபை கௌரவ முதல்வர்

திருமதி
**யோகேஸ்வரி பற்குணராசா**
அவர்கள்

**ஹீரோ, கென்டன்**
**காட்சியறையை**

திறந்து வைக்கிறார்கள். அத்தருணம்
தாங்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

ஹீரோ, கென்டன் விநியோகஸ்தர்கள்,
**ஸ்ரார் ரேடர்ஸ்**
இல.258, 260, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
0214921672



(48,19,21)

## மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)



பேசியல், மேக்கப், மணப்பெண் அலங்காரம்,
சாறிடிசைனிங் ஸ்ரெயிட்னிங், பேமிங், திரெட்டிங்,
வக்சிங், ஸ்மூத்திங், பெடிக்கீயூ, மெனிக்கியூர்,
வெரயாக்கலறிங், நெயில்ஆர்ட், பிளக்ஸ் பொட்டடீற்மெ
ஹெயாட்றீட்மென்ட், சாறிவேக்ஸ், கேக் ஐசிங், தையல்
ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சியில்
இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
(அனுமதிக் கட்டணம் 1000.00 ரூபா).
ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
* பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.

T.P: 0213214013, 0779362642.
வீரபத்திரர் கோயில், கோப்பாய்.

## நிஜம் ஒன்று நிழலாகி
## ஆண்டு நான்கு



நிஜமாக: 11.03.1977
நிழலாக: 04.04.2007

செல்வன்
**நிர்மலன் நிர்மலதாஸ்**
**(தாஸ்)**



விதியென்று சொன்னாலும்
வேதனைகள் குறையவில்லை
காலங்கள் கடந்தாலும்
கவலைகள் மறையவில்லை
கடவுளுடன் கலந்துவிட்ட
உங்கள் நினைவலைகள்
நெஞ்சில் நிறைந்து
நீண்டு தொடர்கின்றன

மல்லாகம் (48,20,23) குடும்பத்தினர்

# கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களை புறந்தள்ளும் பாடசாலை அதிபர்கள்

## மாணவர்கள் பாதிப்பு

வலி.வடக்கு, ஏப்.4

யாழ். மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றின் அதிபர்கள் இலங்கை கல்வி அமைச்சின் சுற்று நிருபங்களைப் புறம் தள்ளி தான்தோன்றித் தனமாக தீர்மானங்களை மேற்கொள்வதால் மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வெளியான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் கணித பாடத்தில் சித்தி அடையாத மாணவர்கள் உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு அனுமதிக்காத நிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாக குறிப்பிட்ட முன்னணிப் பாடசாலைகளில் இருந்து உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி கணித பாடத்தில் சித்தி அடையத் தவறிய நிலையில் குறிப்பிட்ட பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்பதற்கு மாணவர்கள் முன்வந்த போதிலும் அதிபர்கள் மாணவர்களுக்கு உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கான அனுமதியை வழங்க மறுத்து வருகின்றனர். பாடசாலையில் இருந்து விலகி வேறு பாடசாலைகளுக்குச் செல்லும் படியும் அறிவுறுத்தி வருகின்றார்கள்.

இத்தகைய அதிபர்கள் சிலரின் பொறுப்பற்ற நடவடிக்கைகளினால் மாணவர்களும் பெற்றோர்களும் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். மாணவர்கள் விரக்தி நிலைமைக்கும் ஆளாகின்றார்கள்.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைவாக ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்தி அடையத் தவறினாலும் ஐந்து பாடங்களில் சித்தி அடைந்து மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்று இருந்தால் அவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் கலைப் பிரிவில் கல்வி கற்க முடியும்.

தொடர்ந்து வரும் ஆண் டில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற முன்னர் கணித பாடத்தில் சித்தி அடைய வேண்டும்.

மாணவர்களின் நன்மை கருதி கல்வி அமைச்சு சுற்று நிருபங்களை வெளியிட்டுள்ள போதிலும் பாடசாலைகளின் அதிபர்கள் சுற்று நிருபத்தை மீறிச் செயற்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதனால் மாணவர்கள் கடுமையாகப் பாதிப்படைவதுடன் விரக்தியின் நிலைமைக்கும் செல்கின்றனர். பெற்றோர்களும் மன உளைச்சலுக்கு உள்ளாகும் நிலைமையும் வருடாந்தம் அதிகரித்த வண்ணமே உள்ளது.

இந்த விடயத்தில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் தலையிட்டு சுற்று நிருபங்களை அதிபர்களுக்கு வருடாந்தம் நினைவூட்டி மாணவர்களையும் பெற்றோர்களையும் இத்தகைய துன்பத்தில் இருந்து மீட்க முன்வர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மாணவர்களும் பெற்றோர்களும் வேண்டி நிற்கின்றார்கள்.

இதேவேளை, கணிதபாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் இரண்டாம் தடவை பரீட்சைக்குத் தோற்றுவதற்கு பிரதத்தியேக வகுப்புகளை பாடசாலைகளில் நடத்துமாறு வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(எ-86)

## புதிய வருகை...




இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய முகாமையாளராக நியமிக்கப்பட்ட க.கேதீசன் கடந்த வெள்ளிக்கிழமை கோண்டாவில் தலைமையகத்தில் உத்தியோக பூர்வமாகக் கடமைகளைப் பதவி ஏற்கிறார். (4)

# கணித ஒலிம்பியாட் தெரிவுப் போட்டி கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.4

வடமாகாணம் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தரம் 6, 7 மாணவர்களுக்கான தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டி தெரிவுப் பரீட்சைக்கு 12 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்தப் பரீட்சைக்கு யாழ். இந்துக்கல்லூரியில் பாஸ்கரக் குருக்கள் யதுநந்தனசர்மா, றேமன் ரவீந்திரன் ஸ்ரெலின் டிலோசன், ரவீந்திரா யதுசன், ரகுநாதன் ஆதிரயின், இன்பாகரன் சிந்துஜன் ஆகியோரும் யாழ். ஹட்லிக் கல்லூரியில் தங்கவேலாயுதம் வேல்கஜா, சிவநேசன் யதுர்சன் ஆகியோரும் வவுனியா, இறம்பைக்குளம் மகாவித்தியாலத்தில் ரவிச்சந்திரன் தவதான்ஜா, கணேசலிங்கம் சங்கவி ஆகியோரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அச்சுதன் கீர்த்தனனும் மன்னார் பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தில் சாள்ஸ் கிறிஸ்ட் கிளன்சன் மிராண்டாவும் மீசாலை வீரசிங்கம் மத்திய மகாவித்தியாலயத்தில் சிவஞானலிங்கம் யாதவனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை கல்வி அமைச்சின் இசுறுபாய கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அந்தந்த பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார்.

(ம-313)

# நகர மத்தியில் புதிய மணிக்கூட்டுச் சிகரம்

வண்ணை, ஏப்.4

யாழ்.நகர மத்தியில் ஆஸ்பத்திரி வீதியில் புதிதாக மணிக்கூட்டுச் சிகரம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

வைரவர் ஆலய சந்தியில் அமைக்கப்பட்டுள்ள இதனை 'சேபெக்ஷல்' சலவைப் பவுடர் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

இரு பக்கம் நேரத்தைக் காட்டும் மணிக்கூடுகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 15 அடிகள் உயரம் கொண்டதாகவும் சிகர உச்சியில் சூரியக் கதிர்கள் போன்ற வடிவமைப்பும் சிகர கீழ்த்தளத்தில் தமிழ் நங்கை ஒருவர் கோலம் போடுவதான காட்சியமைப்பும் கொண்டுள்ளது.

(ஜ-160)

# யாழ்.சிறையிலிருந்து தப்பி ஓடியவர்களில் இருவர் பருத்தித்துறையில் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்.சிறைச்சாலையிலிருந்து கடந்த வியாழக்கிழமை காலை தப்பியோடிய சிறுவர்களான கைதிகள் மூவரில் இருவர் வெள்ளிக்கிழமை மதியம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே வழக்கில் சம்பந்தப்பட்ட அந்த இருவரும் அவர்களது வசிப்பிடமான பருத்தித்துறைப் பகுதியில் நடமாடுவதாக கிடைத்த தகவலை அடுத்து அவர்கள் அங்கு வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறைப் பொலிஸார் யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் இணைந்து அந்த இருவரையும் கைது செய்தனர்.

மற்றைய நபரைத் தேடிக் கைது செய்யும் நடவடிக்கையில் சிறைச்சாலை அதிகாரிகள் இறங்கியுள்ளனர்.

அந்த நபர் ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்த நபர் கிளிநொச்சியை சேர்ந்தவராவார்.

இவர்கள் மூவரும் கடந்த 6 மாத காலமாக யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். சிறுவர்கள் என்ற காரணத்தால் சிறை அறைகளில் அன்றி பொது அறை ஒன்றிலேயே வைக்கப்பட்டிருந்தனர். அந்த அறையின் ஓட்டைப் பிரித்தே அவர்கள் தப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

(ஜ-14)

# தேசிய நாடக விழாவை முன்னிட்டு குறுநாடகத்துக்கு ஆக்கம் கோரல்

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் கலாசாரத் திணைக்களத்தால் தேசிய நாடக விழாவின் குறுநாடகத்துக்கான சுய படைப்புக்கள் படைப்பாளர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன், நாடகத்தின் இயக்குநராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன், மேடையேற்றப்படுகின்ற குறுநாடகம் 15 வினாடிகளுக்குக் குறையாமலும் 30 வினாடிகளுக்கு மேற்படாமலும் இருப்பதுடன், நாடகப் பிரதியின் மூன்று பிரதிகள் ஏ 4 அளவுடைய தாளில் தட்டச்சிட்டு அனுப்புதல் வேண்டும்.

வெற்றிபெறும் குறுநாடகத்தின் மேடை ஒளியமைப்பு, ஆடை அலங்காரம், மேடை அலங்காரம், நெறியாக்கம், மேடை நிர்வாகம், இசையமைப்பு, நடிப்பு, சுயநாடக எழுத்தாளர்கள் ஆகியவற்றுக்கு விருதுகளும் பணப்பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஆர்வமுடையவர்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் விண்ணப்பம் தொடர்பான விவரங்களைப் பார்வையிட்டு விண்ணப்பங்களைச் 'செயலாளர், தேசிய நாடக சபை, கலாசார அலுவல்கள் திணைக்களம், எட்டாம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தேசிய நாடகசபையின் தலைவர் ஸிரியந்த மெண்டிஸ் அறிவித்துள்ளார்.

(ம-313)

# மர்மப் பொருள் வெடித்ததில் படுகாயமடைந்தார் முதியவர்

## இளவாலையில் சம்பவம்

சொந்த வீட்டில் மீள்குடியமர்வதற்காக வீட்டுக் காணியைத் துப்பரவு செய்து குப்பைகளை எரித்த போது அதற்குள்ளிருந்த மர்மப் பொருள் வெடித்ததில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் உடனடியாக சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச் சம்பவம் இளவாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ந.அருந்தவராசா (வயது 62) என்பவரே படுகாயமடைந்தார்.

தொடைப்பகுதியில் பலத்த காயமும் ஏனைய இடங்களில் சிறுகாயங்களும் இவருக்கு ஏற்பட்டன.

தொடைப் பகுதியில் சத்திர சிகிச்சை மேற்கொண்ட போது சிறு இரும்புத் துண்டு ஒன்று மீட்கப்பட்டது. தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து இளவாலைப் பொலிஸாரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

பளைய 'துப்பாக்கி ரவை' ஏதாவது வெடித்திருக்கலாம் என்று தெரிவித்தார். சம்பவ இடத்துக்கும் நேரில் சென்று பார்வையிட்டதாகவும் கூறினார்.

இப்பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு ஒரு வாரத்துக்கு முன்னர் சில குடும்பகள் மீள்குடியமர்ந்து விட்டன. இன்னும் பல குடும்பங்கள் மீள்குடியமர உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-4)

**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர் நலன்புரி சங்கத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

முதலாம் பரிசு - 4653
இரண்டாம் பரிசு - 2202
மூன்றாம் பரிசு - 679

**10 ஆறுதல் பரிசுகள் வருமாறு**

01. 1006 02 929 3. 3244 4. 1471 05. 3151
06. 142 07. 2959 8. 4249 9. 689 10. 2940

பரிசுகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

[2934] [45-21-23] **செயலாளர்.**

# மரண அறிவித்தல்

## கதிரவேலு கோபாலபிள்ளை

**(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)**



மதவாச்சியைப் பிறப்பிடமாகவும் திகிரி, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கோபாலபிள்ளை வெள்ளிக்கிழமை (01.04.2011) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் கதிரவேலு - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் கதிரவேலு - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் சிங்கராசா (லண்டன்), கருணைராசா (டென்மார்க்), சாந்தகுமாரி (டென்மார்க்), சிவராசா (சுவிஸ்), வசந்தகுமாரி (ஜேர்மனி), ஆனந்தி (பிரான்ஸ்), செந்தில்ராசா (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், இராதா (இந்தியா), கோமதி (டென்மார்க்), கலைச்செல்வி (சுவிஸ்), சுரேஸ்குமார் (டென்மார்க்), விஜயரட்ணம் (ஜேர்மனி), உதயகுமார் (பிரான்ஸ்), வளர்மதி ஆகியோரின் அன்பு மாமனும் கோபிநாத், சாமந்தி, சியாமளா, ஆரபி, துவாரகன், உசாய், தனுசியா, தாரண்ணியா, வினிதா, விதுலன், உமயவன், ஆரண்யா, ஷர்மினி, ஹம்சாயினி, சர்வஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2011) செவ்வாய்க்கிழமை பி.ப.3மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திகிரி,
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

**தகவல்:**
மகன்- கோ.செந்தில்ராசா,
மருமகள் - செ.வளர்மதி.

## பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி சேவை நிலையங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.4

பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி யாழ்ப்பாணக் கிளையின் சேவை நிலையங்கள் நாளை செவ்வாய்க்கிழமை மானிப்பாய், சங்கானை, நெல்லியடி மக்கள் வங்கிக் கிளைகளில் திறந்து வைக்கப்படவுள்ளன.

பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி டி.பி.குமாரகே இந்தச் சேவை நிலையங்களைத் திறந்து வைக்கவுள்ளார்.

இவ்வாறான சேவை நிலையங்கள் சுன்னாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் தனது சேவையினை வழங்கி வருவதாகக் கம்பனியின் முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். (ம-313)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில.
By. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426/302) K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.
Tel- 0776751649 (2935)(45)

**Personal Class** தரம் 3 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும் (அனுமதிக்கு முந்தவும்).
தொடர்பு: பலாலி Road, திருநெல்வேலி. (பிரபல ஆசிரியர்) T.P: 0772764708

**தவறிவிட்டது**

மாணிக்கவாசகர் விஜயகுமார் என்பவரின் தேசிய அடையாள அட்டை, இன்சுரன்ஸ், ரைக்ஸ், சிறுதொகைப் பணம் என்பன டச்சு றோட், உடுவில் - சங்கானைக்கு மிடையில் 31.03.2011 இரவு தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: Mans School வீதி, உடுவில். 0213216586


**ஃபுபே செட்**
வீட்டுக்கும்
மற்றும்
ஹோட்டலுக்கு



ரூபா **3950/-**யிலிருந்து

**டைடஸ் ஸ்டோர்ஸ்**
புறக்கோட்டை,லிபர்டி பிளாஸா
2439422

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



### அமரர் முருகேசு கிருஷ்ணசாமி

**தோற்றம்: 19.10.1942**
**மறைவு: 03.03.2011**

*கடந்த (03.03.2011) வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் முருகேசு கிருஷ்ணசாமி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவு அஞ்சலி நிகழ்வுகளும் இன்று (04.04.2011) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.*

*அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக ஆதி முத்துமாரி அம்பாளை வேண்டுகின்றோம்.*

**மனைவி, மக்கள்,**
தொல்புரம் மத்தி, சுழிபுரம். (38-27) **மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## அப்பாத்துரை கணேசலிங்கம்

**(உரிமையாளர், சத்தியா ஸ்ரோர்ஸ்-அராலி)**



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை கணேசலிங்கம் நேற்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமலிங்கம்- தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் தர்சினி, தயானந்தன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2011) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்


கற்குழி லேன்,
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (39-27)

தகவல்: க.தயானந்தன் (தயா-மகன்).
0214907872

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை கந்தசாமி

**(முன்னாள் கிராமசேவகர், வட்டுக்கோட்டைப் பிரிவு)**



யாழ். சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தசாமி 01.04-2011 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- ஆச்சிமுத்து தம்பதியரின் அருமை மருமகனும், சரஸ்வதியின் அருமைக் கணவரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து நாகம்மா (Malasiya), சுப்ரமணியம், சிவபாக்கியம் (Singarpore) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பகீரதன் (France), சிவநேசன் (பரகாஷ் - London), நாகரஞ்சினி(குஞ்சு - France), நளாயினி (திரவியம் - France), இரத்தினமலர் (மலர் - France), செல்வராணி (ராணி - Canada), சிவரதன் (குமரன் - France) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜனி (France), கலாவதனி (London), பூலோகராஜா (France), சிறிதரன்(France), சற்குணவேல் (France), கலாநாதன் (Canada), ஜெயராணி (France) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், கணவதிப்பிள்ளை, சுப்ரமணியம், மாரிமுத்து ஆகியோரின் அன்பு மைத்துனரும், கௌதமி, சிவா, சத்யன், மனு, சோபகா, நிரோஷன், நிரோஜினி, குமணன், நிவேதினி, கௌசல்யா, தர்சிகா, கௌசிகன், சிந்துஜா, சிவானி, அனிதா, பரதன், சோபதன், வினோதன், ஜெசோரதன், அபரதன், அஜெரதன் ஆகியோரின் அன்புப்பேரனும், அக்சரா அவர்களின் அருமைப் பூட் டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.04.2011) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 Rue Jean Moulin,
93130 Noisy Le Sec, France.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

## மணிவிழா நாயகனை மனமார வாழ்த்துகின்றோம்

உயர்திரு.
**S.B. அரசகுமார்**
அவர்கள்
(முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம் மேற்தரக்கிளை)



மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்த மக்கள் சேவையாளன், செயல்வீரன் ஓய்வுக் காலத்தில் சுகதேகியாக குடும்பத்தாருடன் நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

சுந்தரவேல் வைத்தியசாலை,
கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு. (39)

Dr. வே.கணேசவேல் குடும்பம்

## கூறுவிலை கோரல்

**அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்.**

மேற்படி ஆலய தேர்த் தரிப்பிடம் வர்ண பூச்சு வேலை செய்யப்படவுள்ளது. முன் அனுபவமுள்ள வர்ணம் பூசக் கூடியவர்கள் தேர்த்தரிப்பிடத்தைப் பார்வையிட்டு கேள்விப்பத்திரங்களை கீழ்கண்ட முகவரிக்கு தபால் மூலமாகவோ நேரிலோ 15.04.2011 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

பயன்படுத்தவிருக்கும் வர்ணத்தின் வகை (BRAND) குறிப்பிடப்படவேண்டும்.

செயலாளர்
அல்வாய் மாலைசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்.

மாலுசந்தி, அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
தொ.பே: 0212263206

கு.சிறிசண்முகதேவ்
தலைவர்.

## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 113
திகதி - 02.04.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **D** அதிர்ஷ்ட இலக்கம் **01** வெற்றி இலக்கம் **9 6 3 5 5**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | D 01 9 6 3 5 5 | ரூ. 14,280,281.00 | - |
| 1 பரிசு | 01 9 6 3 5 5 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 9 6 3 5 5 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 6 3 5 5 | ரூ. 10,000.00 | 27 |
| 4 பரிசு | 3 5 5 | ரூ. 1,000.00 | 263 |
| 5 பரிசு | 5 5 | ரூ. 50.00 | 2531 |
| 6 பரிசு | 5 | ரூ. 20.00 | 24556 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 9 6 3 5 | ரூ. 1,000.00 | 27 |
| 8 பரிசு | 9 6 3 | ரூ. 100.00 | 271 |
| 9 பரிசு | 9 6 | ரூ. 50.00 | 2604 |
| 10 பரிசு | D | ரூ. 20.00 | 10208 |
| 11 பரிசு | D 01 | ரூ. 100.00 | 1129 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,952,030.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு ரூ.14,660,780.00

## உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 599
திகதி 2011/04/02

சுப்பர் இலக்கம் **09** வெல்லப்பட்ட இலக்கங்கள் **06 15 17 66**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 11,744,182.40 | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 50,000.00 | 07 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 2,000.00 | 230 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 1,000.00 | 468 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாக இருப்பின் | ரூ. 100.00 | 11,609 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 40.00 | 6,622 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 166,965 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாக இருப்பின் | ரூ. 20.00 | 26,610 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ.7,575,280.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது

அடுத்த புதன்கிழமை ரூ 12,023,359.20

தேசிய லொத்தர் சபை
www.nlb.lk

# 'காப்பெற்' வீதியாகும் கொழும்புத்துறை வீதி

கொழும்புத்துறை, ஏப்.4

கொழும்புத்துறை வீதியை 'காப்பெற்' வீதியாக மாற்றும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பஸ்ரியன் சந்தியிலிருந்து கொழும்புத்துறைச் சந்தி வரையான இந்த வீதியை 'காப்பெற்' வீதியாக மாற்றும் வேலைத்திட்டம் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

சுமார் இரண்டரைக் கிலோ மீற்றர் நீளமுடைய இந்த வீதியின் இருமருங்கும் அகலப்படுத்தி கனரக வாகனங்களின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. (ம-135)

# அதிபர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட அதிபர்களுக்கான ஒருநாள் செயல்திட்ட விளக்கச் செயலமர்வு இன்று காலை 8 மணி முதல் 4மணி வரை யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

உள சமூக இடையீடு மற்றும் ஆலோசனை வழங்கல் நிகழ்ச்சித் திட்டத்தினைப் பாடசாலையில் முறையாக நடத்துவது தொடர்பான இந்தச் செயலமர்வில் யாழ். வலயத்துக்கு உட்பட்ட அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(ம-302)

# சம்பளப் பட்டியலில் ஒப்பமிடல்

யாழ்ப்பாணம், ஏப்.4

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாகக் கடமையாற்றித் தற்காலிகமாக யாழ். மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் இந்த மாத சம்பளப் பட்டியல் யாழ். கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர்கள் நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னர் சம்பளப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(ம-204)

## மணமகள் தேவை

யாழ்.இந்து வேளாள குடும்பம் 35 வயது 5' 10" உயரம் உடைய, London P.R உடைய Doctor மகனுக்கு அழகிய, படித்த, ஆங்கில அறிவுடைய Professionally Qualified மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். அவுஸ்திரேலியாவில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Mail Address Sivaganesh 1973@gmail.com
T.P: 00447925167131
London.

## கண்ணீர் அஞ்சலி



எமது ICM சபையின் தலைமைப் போதகர் REV **டானியல்** Sister **துஷா** தம்பதியரின் அன்பு மகன் ஏதித்தியா-டானியல் 22.03.2011 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார் என்ற செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

**ராசாத்தி அன்ரி குடும்பம்.**
கோணவளை கிழக்கு, கொக்குவில்.
(2965) (38)

## மாண்புமிகு மாதரசிக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

**வசந்தி அரசரட்ணம்**



தென்மராட்சிப் பதியின்
சீரார்ந்த செல்வியே
தேசமெல்லாம் நின் புகழ்
சிறப்புடனே பரவிட
முதல்பெண் மருத்துவ
பீடாதிபதியாகி பெருமை
சேர்த்தீர்- அன்று
முதல் பெண் துணைவேந்தராக
உயர்வுதனைப்
பெற்றீர்- இன்று
இளந்தலைமுறையின் இனிய நற்
கல்விக்கு உரமூட்ட வந்த
இளவரசியே! என்றும் உம்
மகத்தான பணி
சிறந்து நிலைக்க.

மனம் நிறைந்து வாழ்த்தும்:
சபாபதிப்பிள்ளை குடும்பம்,
கோபாலகிருஷ்ணன் தேவராணி குடும்பம்.
கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி.
(2958) (38)

## Dutch (Netherlands), German, French, English

மொழிகளை இலகுவாக கற்கவும் Embassy இனால் நடத்தப்படும் விசாவுக்கான பரீட்சைகளில் சிறப்பாக சித்தியடையவும், அந்தந்த நாடுகளிலிருந்து வருகை தந்த ஆசிரியர்களினால் Audio, Video மற்றும் தமிழ்விளக்கங்கலுடன் கற்பிக்கப்படுகின்றது.

Netherland தூதரகத்தினால் April லிருந்து அறிமுகப்படுத்தப்பட்டவுள்ள M.V.V விசா பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைய புதிய வகுப்புகள் April 06ம் திகதியிருந்து ஆரம்பிக்கப்பட்டவுள்ளன.

**அத்துடன் Netherland Visa வுக்கான நடைமுறைகள் ஆலோசனைகள் மற்றும் மொழிபெயர்ப்புகளும் உண்டு.**

Netherland தூதரகத்தினால் நீண்ட கால நன்மதிப்பை பெற்ற ஒரே International Language Academy

* வெளிமாவட்டத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கபடும்

**Dutch Lanka Academy No 69- 2/1, Galle Road, Dehiwala Tel: 0777251332 / 0112718811**
* Condition Apply

## பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

**கணக்காளர் பதவிக்கான விளம்பரம் தொடர்பானது**

மேற்படி விடயம் தொடர்பாக, பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் 20.01.2011, 21.01.2011 ஆகிய இரு தினங்களும் கணக்காளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பிரகாரம் அதற்கான நேர்முகப் பரீட்சை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதனை விண்ணப்பதாரிகளுக்கு அறியத் தருகின்றோம்.

தலைவர்
வி.சொக்கநாதன்.
(39-21-23) (2956)

## உதவிக் குருக்கள் தேவை

மலேசியா கோலாலும்பூரிலுள்ள பிரசித்தி பெற்ற முருகன் கோயிலுக்கு நித்திய நைமித்திய பூஜைகள் ஆற்றுவதற்கும் அடியார்கள் இல்லங்களில் இடம்பெறும் சமயக்கிரியைகளை நடத்தி வைப்பதற்கும் வேத, ஆகம அறிவும் அனுபவமும் மிக்க குருக்கள் தேவை. இறைதொண்டுச் சேவைக் காலமாக மூன்று (3) வருட விசா ஒழுங்குகளும் இருப்பிட வசதியும் செய்து தரப்படும். மாத தட்சணையும் இதர படிகளும் வழங்கப்படும்.

★ வயதெல்லை 40 முதல் 60 வரை
★ விண்ணப்பதாரிகள் தங்கள் முழுப்பெயர், வயது, வீட்டு முகவரி, தற்போது பணிபுரியும் ஆலயமுகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் தங்கள் பாஸ்போட் அளவிலான புகைப்படத்தையும் இணைக்கவேண்டும்.
★ விண்ணப்பமுடிவுத் திகதி: 15.04.2011
★ விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
இல.73c, மெனிங் பிளேஸ் வெள்ளவத்தை கொழும்பு -06
முருகன் ஆலயம், கோலாம்பூர்

## மரண அறிவித்தல்

**செல்வன் ஏதித்தியா டானியல்**



I.C.M சபையின் தலைமைப் போதகர் Rev.டானியல்- துஷா தம்பதியரின் அன்பு மகன் ஏதித்தியா 22.03.2011 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜரட்ணம், மற்றும் கங்காதேவி, செல்வவிநாயகம் (போதகர் ஜேர்மனி) காலஞ்சென்ற தவலக்சுமி ஆகியோரின் அன்புப் பேரனும் சாரா, தெபோரா, ஜனிக்கியா, லொவிஷா, யோசுவா, மனோவா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை ஜேர்மனியில் நாளை (05.04.2011) செவ்வாய்க்கிழமை நடைபெறும். அன்றைய தினம் பிற்பகல் 4 மணியளவில் மாம்பழம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள (I.C.M) கிறிஸ்துவின் சபையில் ஸ்தோத்திர ஆராதனை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

418, நாவலர் வீதி,
மாம்பழம் சந்தி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
0049 30 25047242, 021 222 6821

தகவல்
கங்காதேவி இராஜரட்ணம்
(2964)(41)

## வீடு வாடகைக்கு

நாவலர் றோட்டில் (ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்) சகல வசதிகளோடு கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0750403308, 0771326489.

## கோழிக்குஞ்சு விநியோகம்

**BAHIRA No-1**

புறொயிலர் குஞ்சுகள் 06.04.2011 விநியோகிக்கப்படும்.

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
★ ஜென்சி பாம், 1ஆம் கட்டை, பருத்தித்துறை.

**T.P: No: 0212222867, 0776090926.**

## Kids Basic Drivers

1-6 ஆம் தர மாணவர்களுக்கான கணினிப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. புதிய பிரிவு ஆரம்பம் : 08.04.2011

தொடர்பு: 0773114803, 0212220242.

(2347)(45)

## காணிகள் விற்பனைக்கு

யாழ்.நகரிலும் நகரை அண்மித்த பகுதிகளிலும் வீட்டுடன் கூடிய காணிகள், வெறும் காணிகள் மற்றும் உல்லாச விடுதி கட்டக் கூடிய கடற்கரையை அண்மித்த பகுதியில் உள்ள காணிகள் என்பன உடனடியாக விற்பனைக்குண்டு. மேலும் தங்களது காணிகளை நியாய விலையில் விற்கவேண்டுமாயின் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். இதற்குத் தரகு கூலி அறவிடப்படமாட்டாது. இது முற்றும் முழுதான சேவை அடிப்படையில் செய்யப்படும்

**தொடர்பு: 0718373354, 0212229210.**

## சமாந்தரப் பயணம் செய்தோருக்கு அபராதம்

தென்மராட்சி, ஏப்.4

வீதியில் சமாந்தரமாகச் சைக்கிளில் சென்ற இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை தனித் தனியாக விசாரித்த நீதிவான் குற்றத்தை இருவரும் ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு மாதம் வீதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ம-207)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 100/= 07.04.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | -0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு | -0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | -0774656377 |
| முருந்தன், பருத்தித்துறை | -0771392593 |

கோழி திருப்பி கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்ரர்**

19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல.021 222 6944

## சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

பின்வரும் பதவிகளுக்குச் சங்க எல்லைப் பரப்பில் வசிக்கும் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பயிற்சிக் கிளை முகாமையாளர்கள்**

1.தகைமை

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (சாதாரணம்)/ இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/தூய கணிதம்/ வர்த்தக கணிதம், தமிழ் மொழி ஆகிய பாடங்கள் உள்ளடக்கியதாக க.பொ.த. (சாதாரணம்) தரப் பரீட்சையில் ஆறு பாடங்களிலான சித்தி.

2.வயது: 18-45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3.வேதனம்: நாள் ஒன்றுக்கு 300/=

**02.உற்பத்திப் பயிற்சியாளர்கள்**

ஜசுபி பழரசத் தொழிற்சாலையின் உற்பத்திக்கு பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

வயது: 18-45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தங்கள் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை பொது முகாமையாளர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), சுன்னாகம் என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ எதிர்வரும் 11.04.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

*(40-21-23)(சி/577348)*

பொதுமுகாமையாளர்

## மகளிருக்கான விடுமுறைக்கால 12 நாள் வகுப்புகள்

◆ வீட்டிலிருந்தவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

**கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (HAIR DRESSING & STYLING)**

50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 வித முடி வெட்டுதல், **தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான** பயிற்சி, Perming தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

✲ Facials, கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் Waxing, எவ்வித சிரமுமின்றி **தமக்குத்தாமே** Facial செய்வதற்கான பயிற்சி.

இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்,

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

✲ தையல் தெரிந்தவர்களுக்கான சாறியிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 09-04-2011 சனி காலை 10.00 மணி**

**கலாலயா**

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

☞ மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

## வீடு வாடகைக்கு

குளிரூட்டப்பட்ட அறைகளுடன் கூடிய விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உகந்தது. நல்லூருக்கு அருகில்.

**தொடர்பு: 0750428200**

## தவறிவிட்டன

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் என்னும் முகவரியுடைய பாலசிங்கம் சுதாகரன் என்பவரது விசேட அ.அட்டை, 101 ஸ்ரீ - 2432, Wp HJ 5213, Wp GF 2134, Wp LB 8493 ஆகிய வாகனங்களின் வரி, காப்புறுதிப் பத்திரங்கள், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன யாழ். நகரப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 0776720762.





*நெல்லியடியிலும் நாங்கள்...*

# புதுக்கடை திறப்பு விழா

*தம்ரோ, பியெஸ்ரா தளபாடங்களின்*
*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்களான*

## ஜமுனா பர்னிச்சர்

181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.







தற்போது எமது கிளை ஸ்தாபனத்தை இன்று (04.04.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மங்களகரமாக திறந்து வைக்கின்றோம் என்பதை எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

## ஜமுனா பர்னிச்சர்

*யாழ்.வீதி, நெல்லியடி,(சிலிங்கோ இன்சூரன்ஸ் முன்பாக நெல்லியடிச் சந்தியிலிருந்து 150 மீற்றர் தூரத்தில்)*

(48,19,20)

**04.04.2011 - 14.04.2011 வரை சிலபொருள்கள் கழிவு விலையில்**

# இலங்கைத் தமிழர்கள் படுகொலைக்கு காங்கிரஸும் தி.மு.கவுமே காரணம்

## கம்யூ.செயலர் ராஜா

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு காங்கிரஸ் கட்சியும், தி.மு.கவுமே முக்கியக் காரணம் என்றார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் து. ராஜா.

புதுக்கோட்டை தொகுதியில் போட்டியிடும் இந்தியகம்யூனிஸ்ட் வேட்பாளர் பி. முத்துக்குமரனை ஆதரித்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற ஊர்தி பிரசாரத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியவை வருமாறு:

இலங்கையில் தமிழர்கள் லட்சக் கணக்கில் படுகொலை செய்யப்பட்டதற்கு முக்கிய காரணமாக இருந்தது காங்கிரஸ்-தி.மு.க. கட்சிகள் தான்.

மன்மோகன்சிங்கின் நட்பு நாடான அமெரிக்கா, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடந்துள்ளன; அதை விசாரிக்க வேண்டும் என கூறியது. அதே போல, ஐரோப்பிய நாடுகளும் குற்றச்சாட்டு தெரிவித்தன.

ஆனால், இந்திய அரசு இலங்கைக்கு நிதியுதவி செய்து தமிழினத்தை அழித்தது. அதே கூட்டணியில் இடம்பெற்றுள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் இலங்கை சென்ற போது, அதிபர் ராஜபக்ஷவின் ரத்தம் தோய்ந்த கைகளைக் குலுக்கினார்.

எனவே, தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் இலங்கைத் தமிழர்களைப் பற்றி பேசும் தகுதியை இழந்துவிட்டன. அதேபோல, தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட போது, அதைக் கண்டிக்காமல் மத்திய அரசுக்கு கடிதம் எழுதினால் எப்படித் தீர்வு கிடைக்கும்.

பணபலத்தின் மூலம் ஜனநாயகப் படுகொலை நடப்பதைத் தடுப்பதற்காகவே தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த நடவடிக்கைகளை முதல்வர் கருணாநிதி விமர்சிப்பதன் மூலம் அவருக்கு தோல்விப் பயம் வந்துவிட்டதையே காட்டுகிறது.

உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் சாதனைகளைக் கூறி வாக்கு கேட்போம் என்கிறார். ஆனால், இந்தியாவில் இதுவரை பதவி வகித்த உள்துறை அமைச்சர்களில் செயற்பாடு இல்லாத அமைச்சர் இவர்தான்.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவுமே திருப்திகரமாக இல்லை. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஏற்படும் ஆட்சி மாற்றம் மூலம் தேசிய அளவிலும் அரசியல் மாற்றம் நிகழும் என்றார் அவர்.

# கூட்டணி அரசை மக்கள் ஆதரிக்கமாட்டார்கள்

## ஜெயலலிதா

தமிழகத்தில் கூட்டணி அரசை மக்கள் ஒருபோதும் ஆதரிக்க மாட்டார்கள் என அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா கூறினார். சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பின்னர் தேவை ஏற்பட்டால் கூட்டணி ஆட்சி குறித்து பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என முதல்வர் கருணாநிதி ஆங்கிலத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தமிழக மக்கள் கூட்டணி ஆட்சிக்கு ஒரு போதும் ஆதரவு அளிக்க மாட்டார்கள் என ஜெயலலிதா தெரிவித்துள்ளார். மாநில விவகாரங்களில் ஒரு தனிக் குடும்பத்தின் ஆதிக்கத்தால் மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் வெறுப்படைந்துள்ளனர் என்றார் அவர்.

தமிழகத்தில் தி.மு.க. அரசுக்கு காங்கிரஸ் வெளியில் இருந்து ஆதரவு அளித்து வருகிறது. தி.மு.க. கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் காங்கிரஸும் அரசில் இணையலாம் எனக் கூறப்படுகிறது. தேர்தல் முடிவுகள் அதைச் சொல்லும். மீண்டும் நாம் ஆட்சிக்கு வருவோம் என ஜெயலலிதா நம்பிக்கை தெரிவித்தார்.

# தாக்குதல் வழக்கில் அழகிரிக்கு முன் பிணை

மதுரையில் வருவாய்த் துறை அதிகாரி தாக்கப் பட்ட வழக்கில் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

எனவே, அவர் எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என்ற நிலைமை ஏற்பட்டது.இந்த நிலையில் நேற்றுக் காலை மு.க. அழகிரி சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் முன் பிணை மனுத் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றத்தின் மதுரை குழு அவருக்கு முன் பிணை வழங்கி உத்தரவிட்டது.

# அனைத்துத் தொகுதிகளிலும் காங்கிரஸ் வேட்பாளர்களை தோற்கடிக்க வேண்டும்

## சீமான் கருத்து

மயிலாடுதுறை, ஏப்.4

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி போட்டியிடும் 63 தொகுதிகளிலும் அந்தக் கட்சி வேட்பாளர்களை தோற்கடிக்க வேண்டும் என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் கூறியுள்ளார்.

நாகை மாவட்டம், மயிலாடுதுறையில் நாம் தமிழர் கட்சி சார்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் இந்தத் தேர்தல் தமிழினத்தின் எதிரி காங்கிரஸுக்கும், தன்மானம் உள்ள தமிழருக்கும் நடைபெறும் யுத்தம். இந்த யுத்தத்தில் வெல்வது யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்தி உங்கள் கையில் உள்ளது.

தமிழ் இனத்தை காங்கிரஸ் கட்சி உதவியுடன் சிங்கள அரசு அழித்தொழித்ததை நாம் மறக்கவில்லை. காங்கிரஸ் கட்சிக்கு நாம் எதற்காக வாக்களிக்க வேண்டும். இந்தியாவின் பிரதமரை நியமிக்கும் வல்லமை படைத்த காமராஜர் எங்கே? தற்போதுள்ள தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் தங்கபாலு எங்கே?

பண பலத்தால் தமிழகத்தைக் கைப்பற்றி விடலாம் என நினைக்கும் கட்சிகளுக்கு தமிழக மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் 50 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி தமிழகத்தின் எந்த பிரச்சினையையும் தீர்க்கவில்லை. குறிப்பாக, ஒக்கேனக்கல், முல்லைப் பெரியாறு பிரச்சினைகளில் தமிழக நலனில் அக்கறை காட்டாத காங்கிரஸுக்கு தமிழர்களின் ஆதரவையும், வாக்கையும் பெறும் தகுதியில்லை.

எனவே, காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிப்பதைத் தவிர்ப்பது ஒவ்வொரு தன்மானமுள்ள தமிழனின் கடமை. தமிழகத்திலிருந்து காங்கிரஸ் விரட்டுவதை அனைவரும் சபதமாக ஏற்க வேண்டும் என்றார் சீமான்.

## பிரசாரம்.....



விழுப்புரம்,உளுந்தூர்பேட்டை தொகுதி வேட்பாளர் முகமதுயூசுப்பை ஆதரித்து மடப் பட்டில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் உரையாற்றுகிறார். அருகில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் மற்றும் பலர் அமர்ந்திருக் கின்றனர்.

# தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க.அமோக வெற்றி பெறும்

## கருத்துக் கணிப்புகளில் தகவல்

டில்லி, ஏப்.4

தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. - தே.மு.தி.க. - கம்யூனிஸ்ட் கட்சிகளின் கூட்டணி பெருவாரியான மக்களின் ஆதரவுடன் அமோக வெற்றிபெறும் - என்று இந்தியா டுடே - ஹெட்லைன்ஸ் டுடே - மெயில்டுடே - ஓஆர்ஜி ஆகியவை நடத்திய கருத்துக் கணிப்பும் அவுட் லுக் வார இதழும் எம்.டிஆர்.ஏ. அமைப்பும் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பும் தெரிவிக்கின்றது.

மேற்கு வங்கத்தில் திரிணாமூல் காங்கிரஸ் - காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியும் கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியும் ஆட்சியைப் பிடிக்கும், அசாமில் எந்தக் கட்சிக்கும் அணிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் இழுபறி நிலைமை ஏற்படும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

கடந்த சட்டப் பேரவை பொதுத்தேர்தலில் கிடைத்த வாக்குகளை அடிப்படையாக வைத்தும், தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக சில கேள்விகளுக்கு வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட பதில்களின் அடிப்படையிலும் இந்தக் கணிப்பு நடைபெற்றுள்ளது.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழல், விலைவாசி உயர்வு, இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது அதைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தது, இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் அடிக்கடி தாக்கப்படுவது, சட்டம் - ஒழுங்குசீர்குலைவு, அமைச்சர்கள் - அதிகாரிகள் நிலையில் காணப்படும் ஊழல் போன்ற காரணங்களால் தி.மு.க. தலைமையிலான கூட்டணியை எதிர்ப்பதாக கருத்துக்கணிப்பில் பங்கு கொண்டவர்களில் பெருவாரியானவர்கள் தெரிவித்துள்ளனர்.

'இந்தியா டுடே' நடத்திய கருத்துக் கணிப்பில் 51% பேர் ஊழலை முக்கிய பிரச்சினையாகக் கருதுகின்றனர். 34% பேர் அது பெரிய பிரச்சினை இல்லை என்கின்றனர்.

முதல்வர் பதவிக்கு ஏற்றவர் ஜெயலலிதாவே என்று 37% பேரும் கருணாநிதியே என்று 34% பேரும் கருதுகின்றனர்.

கருணாநிதியின் அரசுதான் ஊழல் மிகுந்தது என்று 39% பேரும் ஜெயலலிதாவின் அரசு தான் ஊழல் அரசு என்று 21% பேரும் கூறினர்.

அலைக்கற்றை ஊழல் குறித்து தெரியும் என்று 51% பேரும், தெரியாது என்று 17% பேரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அலைக்கற்றை ஊழலில் கருணாநிதி குடும்பத்தாருக்குத் தொடர்பு உள்ளது என்று 38% பேரும் இல்லையென்று 26% பேரும் நினைக்கின்றனர்.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டபோது அந்த விவகாரத்தை சரியாகக் கையாள கருணாநிதி அரசு தவறிவிட்டது என்று 41% பேரும் சரியாகத்தான் கையாண்டது என்று 25% பேரும் கருதுகின்றனர்.

விலைவாசி உயர்வு தங்களை பாதிக்கும் பிரச்சினை என்று 59% பேரும், இது முக்கிய பிரச்சினையே இல்லை என்று 29% பேரும் கருத்துத் தெரிவித்தனர்.

**அவுட்லுக் - எம்.டி.ஆர்.ஏ. கணிப்பு**

2011 சட்டப் பேரவை பொதுத் தேர்தலில் தி.மு.க. - காங்கிரஸ் - பா.ம.க. கூட்டணி ஆட்சிக்கு வரும் என்று 37.4% பேரும் அ.தி.மு.க.- தே.மு.தி.க. கூட்டணி ஆட்சிக்கு வரும் என்று 54% பேரும் ஏனைய கட்சிகள் அல்லது அணி ஆட்சிக்கு வரும் என்று 8.6% பேரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# சப்ரகமுவ பல்கலைக்கழக முதல் வருட மாணவருக்கு இன்று விரிவுரை ஆரம்பம்

கொழும்பு, ஏப்.4

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படுகின்றன எனத் துணைவேந்தர் மகிந்த ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட குழப்பங்கள் காரண மாக பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் இடைநிறுப்பட்டிருந்த நிலையில் முதலாம் வருட மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் இன்று ஆரம்பிப்பதாகவும் -

வகுப்புகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படும் எனவும் துணை வேந்தர் தெரிவித்துள்ளார். அத்துடன் பல்கலைக் கழக்கத்தின் சுமுகமான செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் முயற்சிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-10)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20
.
02
.
1947



மறைவு
03
.
04
.
2010

### அமரர் நல்லையா பெனடிற்

(திதி : 03.04.2011)

அப்பா! ஆண்டொன்று ஆனதப்பா
அன்பான உன்திருமுகம் பார்த்து
கனிவான உன் வாய்மொழி கேட்டு
கலங்கி அழுது கண்ணீர் சிந்துகின்றோம்
பாசமான மனிதனாய் பாசமான அப்பாவாய்
உன்னையே நினைத்து உருகி நிற்கும்
உன் தயவை வேண்டி நிற்கின்றோம்

சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(2978)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தவமணி கணபதிப்பிள்ளை



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் இல 131, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிட மாகவும் தற்போது கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கணபதிப்பிள்ளை 02.04.2011 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி பொன்னி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான நாகன் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் சர்வோதயா வீதி, ஆவரங்காலைச் சேர்ந்த நா.கணபதிப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற வர்களான பொன்னுத்துரை, ஐயாத்துரை, தம்பிஐயா, இராசதுரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தனபாக்கியம், பூமணிதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பாஸ்கரன் (சுவிஸ்), மாலினி (ஜேர்மனி), ஞானசேகரம் (சுவிஸ்), நளினி, சுபாசினி (ஜேர்மனி), பிரபாகரன் (சுவிஸ்), சாமினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் அன் (சுவிஸ்), சின்னத்தம்பி (ஜேர்மனி), ரவீந்திரன் (சுவிஸ்), ரவி (ஜேர்மனி), சுகந்தி (சுவிஸ்), வித்யா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.கணபதிப்பிள்ளை
(கணவர்-
ஒய்வுபெற்ற ஆசிரியர்)

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

### கதிரவேலு நல்லையா



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நல்லையா கடந்த (01.04.2011) வெள்ளிக்கிழமை இறைபதம் சேந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகனும், தங்கச்சிப் பிள்ளையின் அன்புக்கணவரும் சிவநேசன் (கனடா), ஞானாம்பிகை (டென்மார்க்), செந்தாமரை ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமராவதி (கன டா) சிவகுமார் (டென்மார்க்), ஜெயரத்தினம் (இ.போ.ச) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நடராசா, இலட்சுமி மற்றும் கனகசபை , தங்கம்மா (கனடா), நல்லம்மா (கனடா) ஆகியோரின் சகோதர னும், ஐங்கரன், மதுரா, கீர்த்தனா, அனந்தனா, இளங்கோ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த (02.04.2011) சனிக்கிழமை திருவடி நிலை இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# சுகாதாரச் சீர்கேடு; 6 பேருக்கு அபராதம்

கிளிநொச்சி நகரப் பகுதியில் சுகாதாரக் கேடான முறையில் உணவுப் பண்டங்களையும் கலாவதியான உணவுப் பொருள்களை வைத்திருந்தவர்களும் நடைபாதைகளில் சர்பத் வியாபாரம் செய்தவர்களுமாக 10 பேருக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் அபராதம் விதித்து எச்சரிக்கையும் செய்தது.

சுகாதாரப் பரிசோதகர்கள் நிகழ்த்திய திடீர் சோதனையின்போது சுகாதாரக் கேடான உடல் நலத்துக்குப் பாதிப்பான உணவு வகைகளை விற்பனை செய்த நால்வரையும் சர்பத் வியாபாரம் செய்த 6 பேரையும் கையும் மெய்யுமாகப் பிடித்தனர்.

இந்த 10 பேரும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களை கடுமையாக எச்சரித்த நீதிவான் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

எதிர்காலத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தல்களுக்கமைய உணவு, சர்பத் விற்பனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நீதிவான் எச்சரிக்கையில் குறிப்பிட்டார். (ஐ-236)

## செல்லப்பா சுவாமிகளின் குருபூசை நல்லூரில்

யாழ்ப்பாணம், ஏப்.4

நல்லூர் தேரடி செல்லப்பா சுவாமிகளின் 96ஆவது குருபூசை தின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தேவார, திருவாசகம், பண்ணிசை, நற்சிந்தனைப் பாடல்கள் பாராயணம், விசேட பூசைகள் என்பனவும் இடம்பெறும். (ஐ-313)

## சர்வதேச....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கழகத்தில் உரை நிகழ்த்திய போது தெரிவித்திருந்த பல முக்கிய விடயங்களில் பின் வருவனவும் சிலவாகும்:

''இணக்கப்பாடு என்பது மோதல்களின்போது நிகழ்ந்து விட்ட அநீதிகள் முறை கேடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவே இருக்க வேண்டும், யார் இவைகளை செய்தவர்கள் என்பது முக்கியமல்ல புலன் விசாரணைகளை நடத்துவதும், பொறுப்பாக இருந்தவர்களை பொறுப்புக் கூறும்படியாக செய்வ தும் முக்கியம், போர் முடிந்த கடைசிமாதம் எத்தனைபேர் உயிர் இழந்தார்கள் என்பதைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தாலும் ஐ.நா. கணிப் பின்படி ஆயிரக்கணக்கானவர்கள் இறந்துள்ளார்கள், இந்த மரணங்கள் ஆராயப்பட வேண்டும். தவறு இழைத்தவர்கள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இணக்கப்பாட்டு செயல் முறையில் பொறுப்பு ஏற்பதென்பது முக்கியமான அம்சமாகும். அது இல்லாமல் அமைதியென்பது குண மாகாத புண்போல புரையோடி நிற்கும். மனித உரி மைகளையும் சர்வதேச மனித விழுமியங்களையும் மீறி செயற்பட்டிருக்கக் கூடிய தனி நபர்களை பொறுப்புக்கூறும்படி செய்யும் வகையில் நம்பகமான சுயேச்சையான செயல் முறையை அமுல்படுத்துவது - அதற்கான பிரதான பொறுப்பு இலங்கை அர சையே சார்ந்திருக்கிறது. இலங்கை அரசாங்கம் அப் படியானதொரு வெளிப்படைத் தன்மையுள்ள சர்வ தேசதரத்தினை கொண்ட நடைமுறையை ஏற்படுத்த வேண்டும் என்பது எமது கருத்தாகும். அவ்வாறான பொறிமுறையொன்று இல்லாத பட்சத்தில் சர்வதேச பொதுமுறை யொன்றை நிறுவும்படியான அழுத்தம் அதிகரிப்பதாகவே இருக்கும்.

நிலையான அமைதிக்கு நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்புடன் அரசியல் தீர்வு குறித்து இலங்கை அரசு இரண்டு கட்டபேச்சுக்கள் நடத்தியிருப்பது அமெரிக்கா ஊக்கமடைந்துள்ளது. மூன்றாம் கட்டம் முதல் இரண்டு கட்ட பேச்சுக்களின் அடிப்படையில் ஆக்கபூர்வமான முறையில் தீர்க்கமாக அமையும் என்றே எதிர்பார்க்கின்றோம் என்று பிளேக் தெரிவித்திருந்தார்.

# வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஏப் 02

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 863 ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "X" என்ற ஆங்கில எழுத்தும் 03/24/31/35 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 15 தெரிவாகியது. இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப் படவில்லை.

நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாகத் தலா பத்து லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 04 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 319 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது. இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15,893 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 221,787 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 33,070 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஐ)

## கண்ணீர் அஞ்சலி



எமது பீடத்தின் 21 ஆம் அணி மாணவன்
*சி.விஜயதீபனின்* அன்புத் தந்தை

### நா.சிவகுருநாதன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவர் ஒன்றியம்,
விவசாயபீடம்.

(2975)

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

### திருமதி நாகேஸ்வரி மாணிக்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை யா/ வீமன்காமம் ம.வி)

எமது குடும்பத்தலைவி இறையடி சேர்ந்த செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்டு ஆறுதல் கூறி, பல வழிகளிலும் உதவி புரிந்த சாயி சகோதர, சகோதரிகளுக்கும் அயலவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் யா/ செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களுக்கும் தொலைபேசி, கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி செலுத்திய யா/ வீமன்காமம் மகாவித்தியாலய பாடசாலை சமூகத்தினருக்கும் நல்லூர் கோட்ட அலுவலர், அதிபர்களுக்கும் மேலும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''சாயி இல்லம்'',
பொற்பதி அவெனியூ,
கோண்டாவில்.

குடும்பத்தினர்.
0213218016

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

*செல்வி சாருஜா நந்தகுமார் (சாருக்குட்டி)*
(அச்சுவேலி குழந்தை யேசு பாலர் பாடசாலை மாணவி)

தோற்றம்
28
★
08
★
2006



மறைவு
04
★
04
★
2010

நித்தம் நித்தம் உன் நினைவால்
நீர் வடிக்கும் எம் விழிகள்
பார்த்த இடமெல்லாம் சாருக்குட்டி
உன் சிரிப்பு ஓசைகள்
மூடிடும் எம் விழியினுள் தினம்
ஆடுகின்றது உன் அழகு முகம்
நாள்கள் பல நகர்ந்து
ஆண்டுகள் பல கடந்தாலும் - நீ
எங்களுடன் வாழ்ந்த பசுமையான
நினைவுகள் என்றுமே எம்
மனதை விட்டு மாறாதம்மா
மீண்டும் ஒரு பிறப்பு உண்டேல்
எம் மடியில் மகளாகப் பிறக்க
இறைவனை வேண்டி உன்
ஆத்மா சாந்தி அடைய எங்களது
கண்ணீரைக் காணிக்கை
யாக்குகின்றோம்.

இன்றுபோல் என்றும்
உன்நினைவுடன் வாழும்
குடும்பத்தினர்.

சங்கானை வீதி, தென்மூலை,
அச்சுவேலி.

# யாழ். நகர், தும்பளை, மானிப்பாயில் தியானமும் குணமாக்கல் வழிபாடும்

**தவக்காலத்தை முன்னிட்டு இன்று முதல் 3 தினங்கள்**

யாழ்ப்பாணம், ஏப்.4

தவக்காலத்தை ஒட்டி யாழ். குடாநாட்டில் இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்கு தவக்காலத் தியானமும் இறைதியான குணமாக்கல் வழிபாடும் நடைபெறவுள்ளன.

தமிழ் நாட்டில் இருந்து வந்துள்ள அருட்திரு. பீற்றர் அமல்ராஜ் அடிகளார் தலைமையிலான குழுவினர் இந்த வழிபாடுகளை நிகழ்த்த உள்ளனர்.

இதன்படி, இன்று காலை 8.30 மணி தொடக்கம் 12.00 மணிவரை யாழ். பழைய பூங்கா வீதியில் உள்ள இறைதியான இல்லத்திலும் - மாலை 4.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரைக்கும் பருத்தித்துறை, தும்பளை லூர்த்து அன்னை ஜெபி வளாகத்திலும் தவக்காலத் தியானமும் இறைத்தியான குணமாக்கலும் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் தவக்கால தியானம் நடைபெறும்.

நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 4.30 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை யாழ். மரியன்னை பேராலய வளாகத்தில் குணமாக்கல் சிறப்பு வழிபாடும் தியானமும் நடைபெறும்.

(ஒ-10-135)

# கண்டி இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ். போதனா வைத்தியசாலையில் கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டி ருந்தவேளை ஏற்பட்ட சிறு தகராறு காரணமாக சகதொழிலாளர்களால் தாக் கப்பட்ட இளைஞர் ஒருவர் உள்காயங் களுக்கு இலக்காகியுள்ளார்.

இவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவத்தில் கண்டியைச் சேர்ந்த வி.ராஜேஸ்வரன் (வயது 21) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

யாழ். ரயில் நிலையத்தில் தற்காலிக கூடாராங்களில் தங்கியிருக்கும் தென் னிலங்கையைச் சேர்ந்த நால்வர் கொண்ட குழுவினரே இவ்வாறு தாக்கினார்கள் என்று யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஒ-4)

# இலங்கை அணிக்கு ஜே.வி.பி. வாழ்த்து

2011 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற இலங்கை அணிக்கு முதலில் எமது வாழ்த் தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- இவ்வாறு ஜே.வி.பி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட் டுள்ளவை வருமாறு:-

எந்த ஒரு குழுவும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாவது, அது வரை முகம் கொடுத்த சகல போட்டிகளிலும் திறமையை வெளிப்படுத்தியதாலேயேயாகும். அதனால், இறுதிப் போட்டியில் பெற்ற தோல்வியையும் வெற்றியாகவே கருதவேண் டும் என்பதை ஞாபகமூட்ட விரும்புகின்றோம்.

உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிலர் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றதற்காக இலங்கை கிரிக்கெட் அணி யைக் கைவிட்டுச் சென்றுள்ளமையைக் காணக் கூடியதாகவிருந்தது. வெற்றியைப் போலவே தோல்வியையும் தாங்கிக்கொள்ளும் சக்தி நம் அனைவருக்கும் இருக்கவேண் டும். - இவ்வாறு அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (சி)

## பாண் மற்றும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பயன்படுத்தப்படும் பேக்கரி உரிமையாளர்கள் நாடு முழுவதும் பாதிக் கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

கோதுமைமாவின் விலை அதிகரிக்கப் பட்ட சந்தர்ப்பத்தில் பேக்கரி உற்பத்திகளின் விலைகளை அதிகரிக்காத நாம் இப்போ தைய எரி பொருள்களின் விலை அதிகரிப் பைத் தொடர்ந்து பேக்கரி உற்பத்தி களின் விலைகளை அதிகரிக்க வேண்டிய கட்டா யத்தில் உள்ளோம். அரசு இதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று என்.கே.ஜயவர் தன மேலும் கூறினார்.

(ஒ-சி)

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட் டுள்ளவை வருமாறு:-

உலகக் கிண்ணப் போட்டிகளில் மூன்று தடவைகள் இறுதிப் போட்டியில் விளை யாட சந்தர்ப்பம் கிடைத்ததை பாக்கியமாகக் கருதுகின்றேன். எமது கிரிக்கெட் அணியின் திறமையால் ஒரு தடவை உலகக் கிண் ணத்தை வெல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்த முறை உலகக் கிண்ண இறுதிப் போட்டியிலும், இரண்டாவது இடத்தைப் பெற்று இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றமைக்காக குமார் சங்கக்கார தலைமையிலான எமது கிரிக்கெட் குழுவுக்கு நாட்டு மக்கள் அனைவரது சார் பிலும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றுள்ளது. (ஒ-சி)

**அலுவலகம் வாடகைக்கு**

யாழ். இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் 3500 சதுர அடி கொண்ட வீடு வாகனத் தரிப்பிட வசதியுடன், 9 றூம், கோல், பல்கனி வசதிகளுடன் கூடியது வாட கைக்குண்டு. N.G.O. அல்லது அலுவலகப் பாவனைக்கு ஏற்றது.
தொடர்பு : 0772850753 (2979) (34)

## ஜேர்மன் தொல்லியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் ஹய்ரும் செம் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

இந்தக் குழுவினர் கந்தரோடை, ஆனைக்கோட்டைப் பகுதி களில் இருந்து மீட்கப்பட்ட தொல்பொருள்களைப் பார்வையிட்ட தோடு, இந்த வருட இறுதியில் தாம் யாழ்ப்பாணத்தில் ஆய்வு களை நடத்தவுள்ளோம் எனத் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். ஞானக்குமரனும் கலந்துகொண்டிருந் தார். (ஒ-10-319)

## மும்மொழிகளிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமே காணப்படுகின்றன.

இதனால், பொதுமக்கள் இவற்றைப் புரிந்துகொள்ள முடியாமல் பெரும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். எனவே, இந்த நிலையை மாற்றியமைக்க வேண்டியது அவசியம் எனவும் அமைச் சர் கூறியுள்ளார்.

(சி)

## மக்கள் கவனம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை உயர்வுகள், சேவைகளின் விலை அதிகரிப்பு உட்பட பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் நிறைவடைந்திருக்கும் நிலை யில் வாக்களித்த மக்களை அரசு ஏமாற்றியுள்ளது. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி நடைபெற்ற தினத் தில் அரசு எரிபொருள்களின் விலை யையும் அதிகரித்தது.

அன்றைய தினம் மக்களின் கவனம் அனைத்தும் கிரிக்கெட் போட்டியிலேயே இருந்தது. இந் நிலையில் மிகவும் சூட்சுமமான - தந்திரமான முறையில் அரசு எரிபொருள்களின் விலையை அதி கரித்து மக்களை ஏமாற்றுவதற்கு முயற்சித்துள்ளது.

எதுவித முன்னறிவித்தலுமின்றி அரசு இவ்வாறு செய்தமை யானது சந்தைக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குச் செல்லும் மக்களைப் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுக்க வைத்துள்ளது.

குறிப்பாக தமிழ் - சிங்கள புத்தாண்டைக் கொண்டாட இருக் கும் நிலையில் பொருள்களின் விலையை அதிகரித்துள்ளமையா னது மக்களின் வயிற் றில் அடிக்கும் செய லாகும். இதனால் மக்களின் பிரச்சினை கள் மேலும் அதிக ரிக்கும்.

காஸ், எரிபொ ருள்கள், அத்தியா வசிய பொருட்கள் ஆகிய வற்றின் விலைகளைக் குறைத்து புதுவரு டத்தை மக்கள் கொண்டாடும் வகையில் மக்க ளுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் கடப்பாடு என்பது சுட்டிக்காட் டத்தக்கது.

அரசு மீண்டும், மீண்டும் இவ்வாறு விலைகளை உயர்த்துவதானது மக்களை ஏமாற்றி ஆட்சி புரியும் அர சுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதைத்தான் எடுத்துக்காட்டுகி றது. - என்றுள்ளது. (ஒ-சி)

**புதுக்கடைத் திறப்பு விழா**

நிகழும் மங்களகரமான விகிர்த்தி வருடம் சித்திரை மாதம் 04 ஆம் நாள் இன்று (04.04.2011) திங்கட்கிழமை மதியம் 12 மணிமுதல் 1 மணிவரையுள்ள ரேவதி நட்சத்திரம் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

**பிரித்திகா கவரிங் அழகுசாதன நிலையம்**

என்னும் எமது புதுக்கடைத் திறப்பு விழாவுக்குத் தாங்களும் தங்கள் குடும்ப சகிதமாய் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(2972) (31)

வாழ்த்துவோர் : பிறேம் குடும்பத்தினர்.

பிறேம் பிளாசா மேல்மாடி,
யாழ்வீதி, மானிப்பாய்.

பிறேம் நகைமாடம்,
யாழ்வீதி, மானிப்பாய்.

## உலகக் கிண்ணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசங்களில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. சம்பவத்தில் காயமடைந்த மூன்று இளைஞர்கள் டிக்கோயா வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காடையர் கூட்டமொன்று பட்டாசு வெடிகளை தமிழர்களின் வீடுகளுக்குள் கொளுத்தி வீசிவிட்டுப் பின்னர் உட் புகுந்து தாக்குதலிலும் ஈடுபட்டனர்.

தாக்குதலில் ஈடுபட்ட கும்பலில் சிங்களவர்கள் எவரும் இருக்க வில்லை. எனினும் இனவாதத்தை தூண்டி முரண்பாடொன்றைத் தோற்றுவிக்கும் தீய எண்ணத்திலேயே அந்தக் கும்பல் செயற்பட் டுள்ளது - என்றார்.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று பொலிஸ் ஊடகப் பேச் சாளர், பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயகொடி தெரிவித்துள் ளார். (ஒ-சி)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றரை வருடங்களாக பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப் பட வில்லை. இந்த நிலையில் பெற்றோல், டீசல் விலைகள் அதி கரித்துள்ளன. இதனால் நட்டத் தைத் தவிர்த்துக்கொள்வதற்காக பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். - என்றார். (ஒ-சி)

## கடற்படைச் சிப்பாய்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தில் ஆயுதக் குழு ஒன்று இலங்கை கடற்பரப்பில் வைத்து ஒரு சிலரைப் படகில் ஏற்றுவதைத் தாம் கண்டனர் என இந்திய மீனவர்கள் அறிவித்திருந்தனர்.

இது தொடர்பாக கடற்படைப் பேச்சாளரிடம் கேட்டபோது;

ஆம். இவ்வாறானதொரு தகவலும் எமக்குக் கிடைக்கப்பெற் றுள் ளது எனக் கூறிய அவர் அது தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் கூறினார்.

காணாமற்போயுள்ள கடற்படை சிப்பாய்களின் உறவினர்களிட மும் அவர்கள் தொடர்பாகத் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என கடற்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடற்படை சிப்பாய்கள் கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட் டுள்ளனரா? அல்லது ஏதாவது விபத்தில் சிக்குண்டுள்ளனரா? என்றெல்லாம் தற்போது கேள்விகள் வருகின்றன. இது தொடர்பில் உங்களின் பதில் என்ன என்று பேச்சாளரிடம் கேட்டபோது;

அவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்த பின்னர்தான் என்ன நடந்துள்ளது என்பதை எம்மால் தெளிவாகக் கூறமுடியும். - என்றார். (ஒ-சி)

## மரண அறிவித்தல்

### திருச்செல்வம் அமலதாஸ் (விஜி)



அச்சுவேலி வடக்கு, அந்தோனியார் கோயி லடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் அமலதாஸ் (விஜி) சனிக்கிழமை (02.04.2011) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருச்செல்வம் மற் றும் அருளம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் பிலேமினா, வின்ஸன் (இத்தாலி), லோறன்ஸ் (ஜேர்மனி), ஜெயா, கலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் செபமாலை, லீனஸ் (பஹறேன்), ஜெசிந்தா (ஜேர் மனி), அனுராதா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும் நிக்ஸன், தனம், லாசன் (ஜேர்மனி), கொன்சி (இத்தாலி), லுசின்டா, லூட் சியா (இத்தாலி), பத்மநாதன் (இத்தாலி), சமலதாஸ் ஆகியோரின் சித்தப்பாவும் யூலி (இத்தாலி), குமார் (இத்தாலி), சகிச்சி, லக்ஸன், சென்றின், கென்றியா, டனிஸ்போல், கொன்ஸன், டனியலா (இத் தாலி) ஆகியோரின் பேரனும் செபமாலை, காலஞ்சென்ற மிக்கேல், கபிரியேல், நட்சத்திரம், காலஞ்சென்ற இராசம்மா, பெர்னாண்டோ ஆகியோரின் அன்பு மருமகனும் குருசுமுத்து, தோமஸ், பவளம், காலஞ்சென்ற திரேசம்மா ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி ஆராதனை இன்று (04.04. 2011) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அச்சுவேலி வடக்கு புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
தி.அருளம்மா (தாய்)
குடும்பத்தினர்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(சி/577371) (34)

# சகலரும் சகோதரர்களாக வாழ்ந்து நாட்டின் பெருமையைக் காப்போம்

## பிறந்ததின நிகழ்வில் நயினை விகாராதிபதி

யாழ்ப்பாணம், ஏப். 4

அன்பு, கருணை போன்ற தர்மபோதனைகளால் மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்ற புத்த பகவானின் வழியில் நாங்கள் எல்லோரும் சகோதரர்களாக வாழ்ந்து நமது நாட்டின் பெருமையைப் பேணிக்காப்போம் என நயினாதீவு ஸ்ரீ நாகவிகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ கூறினார்.



நயினாதீவு ரஜமகா விகாராதிபதி நவதகல பதுமதிஸ்ஸ கீர்த்தி திஸநாயக்க தேரோ தனது 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தனது சொந்த நிதியில் இருந்து வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பத்துக்கு கட்டி வழங்கிய வீட்டின் சாவியை வடக்கு கடற்படைத் தளபதி வீரசேகர வீட்டு உரிமையாளரிடம் கையளிப்பதைக் காணலாம் (7)

தேரரின் 50 ஆவது பிறந்த தினமும் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள குடும்பத்துக்கு வீடு வழங்கும் நிகழ்வும் நேற்று நயினாதீவில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பேசிய விகாராதிபதி மேலும் பேசும்போது கூறியவை வருமாறு:-

இது எனது பிறந்ததின விழாவாக மட்டும் நான் கருதவில்லை. இந்த நாளை மக்களுக்கு உதவும் ஒரு நாளாகவே நான் கருதுகின்றேன். நயினாதீவு மக்களுடன் எனது சிறுவயது முதலே பழகியவன். அவர்களுடைய தேவைகள், கஷ்டங்களைத் தெரிந்துகொண்டு அதற்கு உரியமுறையில் உதவிகளை முடிந்த வரை செய்யவேண்டும் என்பதே எனது விருப்பம். நீங்கள் அனைவரும் என்மீது மிகுந்த அன்பு கொண்டவர்கள். இன்றைய நாளில் அனைவரும் ஒருங்கே வந்து உங்கள் வாழ்த்துக்களை வழங்கியமை எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகின்றது - என்றார்.

கிராம அலுவலர் ச.அம்பிகைபாகன் உரையாற்றுகையில் -

நயினாதீவுக்கும் பௌத்த மதத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது போல் வண.ரூதகே அவர்களுக்கும் கடற்படையினருக்கும் மக்களுக்கும் பரஸ்பரம் புரிந்துணர்வும் ஒற்றுமையும் உண்டு. நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளின் போது நயினாதீவு மக்கள் எவ்வித பிரச்சினைகளுமின்றி - அச்சம் ஏதுமின்றி - வாழக் கூடியதாக இருந்ததற்கு எமது நாகவிகாராதிபதியின் செயற்பாடுகளே காரணம்.

விகாராதிபதியும் கடற்படையினரும் எமது தீவுக்காக ஆற்றிவரும் சேவைக்காக நயினை மக்கள் தமது நன்றியைத் தெரிவிக்கின்றார்கள் - என்றார்.

வடக்கு கடற்படை அதிகாரி வீரசேகர, வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றினார்கள்.

(ஒ-ஐ-7)

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வுப் பேச்சுக்கள் இன்று

கொழும்பு, ஏப்.4

தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு தொடர்பான முதற்கட்டப் பேச்சுகள் இன்று இடம்பெறும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தோட்டத் தொழிலாளர் சங்கக் கூட்டுக் கமிட்டி ஆகியவற்றின் பிரதிநிதிகள் தோட்ட முதலாளிமார் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவர்.

தோட்டத் தொழிலாளர்கள் இன்று வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், எரிபொருள்களின் விலைகள் நேற்றுமுன்தினம் முதல் அதிகரித்துள்ளன.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு தோட்டத் தொழிலாளிகளுக்கு நாள் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து பேச்சு நடத்தப்படும் என இலங்கைத் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கச் செயலாளர் கே. வேலாயுதம் தெரிவித்தார்.

(ஒ - சி)

AMBAL EXPRESS
அம்பாள் எக்ஸ்பிரஸ்



குளிரூட்டப்பட்ட முழு சொகுசு தினசரி
யாழ் ⇄ கொழும்பு பஸ் சேவை.
தொடர்புகளுக்கு :-
யாழ்ப்பாணம் - 0771798963 கொழும்பு - 0771532343
குமார் - 0777176516 சுகன் - 0773276416

யாழ் நகரில் வரும் புதுவருடத்தை முன்னிட்டு
BCHS BRITISH COLLEGE OF HIGHER STUDIES
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

To Study in UK(London), Canada, Australia,Newzealand Hot.... Hot courses for easy Student visa are open now
100% நல்ல சம்பளம்
FOUNDATION DIPLOMA IN HOSPITALITY (HOTEL) MANAGEMENT
FOUNDATION DIPLOMA IN NURSING (HEALTH & SOCIAL CARE)
FOUNDATION DIPLOMA IN MANAGEMENT
எங்கு சென்றாலும் நல்ல வேலை வாய்ப்பு
Qualification: G.C.E.[O/L] Plus IELTS 5.5

After G.C.E. A/L or O/L → 6 Months / 3 Months Foundation Diploma @ BCHS → 2½ Years Diploma & Degree
குறைந்தது 3 வருடத்தில் நீங்கள் ஒரு பட்டதாரி தகுதியான வேலையுடன்

IELTS (International English Language Testing System)
(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We Gurantee Minimum 6.5 Band upwards

Diploma in English [2 Months] Advanced Diploma In English [2 Months]
100 % பயிற்சி 100 % வெற்றி

புதிய தொழில் நுட்பத்திறகமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் 100 % உறுதி.

SPONSOR/SETTLEMENT VISA - EXAMS
பிரித்தானியா அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக் கொள்ளுவதற்கான ஆங்கிலப் பரீட்சை தொடர்பான ஆலோசனைகளும், அதற்கான பரீட்சைகளும் (A1, PTE, ESOL) எங்களால் வெற்றிகரமாக நடாத்தப்படுகிறது.
Duration : 2 Months
புதிய பிரிவு 15-04-2011

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே நேரடித் தொடர்பு கொள்ளவும்.
Second Floor, No.15, Siramplyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கோசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913 0714299935
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
திகதி 15-04-2011 காலை : 10.00 மணி
16-04-2011 மாலை : 03.00 மணி

# மரண அறிவித்தல்கள்



### கந்தையா குலசிங்கம்

(பிரியா சுப்பமாக்கெட், புன்னாலைக்கட்டுவன்)

கரம்பன் தெற்கைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் புகுந்த இடமாகவும் ஊரெழுவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குலசிங்கம் நேற்று (03-04-2011) ஞாயிற்றுக்கிழமை இயற்கை எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தையல் நாயகி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், கேமலதா (பிரான்ஸ்), மணிவண்ணன், பிரபாகரன், பிரதீபன், பிரதீசன் (பிரான்ஸ்), கேமபிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஈஸ்வரன் (பிரான்ஸ்), காயத்திரி ஆகியோரின் மாமனாரும், லக்சிகா, லக்ஸ்மன், அபினயா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சுப்பையா, சுபாரத்தினம் மற்றும் மகேஸ்வரி, இரத்தினா, செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான தளையசிங்கம், யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலாம்பிகை, கந்தசாமி, தேவசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2011) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(பிரியா சுப்பமாக்கெட், புன்னாலைக் கட்டுவன் சந்தி)

பலாலி வீதி,
ஊரெழு.



### காசிப்பிள்ளை சின்னத்தங்கம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் புகுந்த இடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை சின்னத்தங்கம் நேற்று (03.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கமலாம்பிகை, கந்தசாமி, தேவசாமி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகலிங்கம், ரஞ்சினி, குமணா, காலஞ்சென்ற குலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2011) திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஊரெழு பொக்கணை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.கந்தசாமி, கா.தேவசாமி
(மகன்மார்) (புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

பலாலி வீதி,
ஊரெழு.

INORGANIC CHEMISTRY
Batch II Sat, Sun 6.15 - 7.15 p.m
English Medium
Commence on 09.04.2011
பிரிவு III தமிழ்மொழிமூலம்
இறுதிப் பிரிவு / Wed 3 - 5
ஆரம்பம் - 06.04.2011 Wed 3 pm
By - அன்பு
THE SCIENCE CORNER

BAJAJ Distinctly Ahead
இலங்கையில் அதிகமான விற்பனையாவதும் எரிபொருள் சிக்கனம் கொண்ட பஜாஜ் மோட்டார் சைக்கிள்





வாடிக்கையாளரின் நலன் கருதியும் எமது நிறுவனத்தை விஸ்தரிக்கும் நோக்குடனும்
எமது புதியகிளையை இல.53, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
எனும் முகவரியில் 04.04.2011 காலை 9.30 மணியளவில் திறந்துவைக்க உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்..
முன்பதிவுகளுக்கு: 0771711819, 0217200750
யாழ்.நகர விற்பனை முகவர்
S.J.MOTORS
04.04.2011 அன்று கொள்வனவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள் அனைத்துக்கும் இன்னொரு பெறுமதிமிக்க ஹெல்மட் இலவசம்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# மீட்டுப் பார்க்க வேண்டிய பத்தாவது உலகக் கிண்ணத் தருணங்கள்





- டிலீப் -

கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக உலகத்தையே ஆட்டிப்படைத்திருந்த உலகக் கிண்ண கொண்டாட்டம் நேற்று முன்தினம் ஒருவாறு முடிவுக்கு வந்துள்ளது. பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் களமிறங்கிய அணிகளில் பலமான அணி யாக திகழ்ந்த இந்திய அணி கிண்ணத்தை பெற்றுக் கொண்டது. 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் திகதி கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி கிண்ணம் வென்று சரியாக 28 ஆண்டுகளின் பின்னர் அதே திக தியில் மீண்டும் டோனி தலைமையிலான இளம் கூட் டணி பத்தாவது உலகக் கிண்ணத்தை தமது சொந்த மண்ணில் முதன் முறையாக வென்றுள்ளது.

1996 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆசிய அணிகள் பத்தாவது உலகக் கிண்ணத்தை நடத்தும் வாய்ப்பினை பெற்றுக்கொண்டன. இதில் பாகிஸ்தானில் ஆரம்பத்தில் உலகக் கிண்ண போட்டி நடைபெறு வதாக இருந்த போதும் பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக இறுதி நேரத்தில் பாகிஸ்தானில் போட் டிகளை நடத்துவதில்லை என்று முடிவெடுக்கப் பட்டது. இதனால் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகளுமே போட்டியை நடத்தின.

பதினான்கு அணிகள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தன. முதல் சுற்றில் புள்ளிகள் அடிப்படையில் முதல் நான்கு இடங்களையும் பெற்றுக் கொள்ளும் அணிகள் காலிறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும். காலிறுதிச் சுற்று 'நொக் அவுட்' சுற்றாக இந்த முறை இடம்பெற்றது. 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற போட் டிகள் மிக நீண்டகாலம் இடம்பெற்றதால் இந்த முறை நாள்களின் எண்ணி க்கையை குறைக்கும் பொருட்டு 'நொக் அவுட்' சுற்றாக இடம்பெற்றது. 'நொக் அவுட்' சுற்றில் வெற்றி பெறும் நான்கு அணிகள் அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெறும். அத்துடன் முதன் முறையாக கள நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்யும் (யு.டி.ஆர்.எஸ்) அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறான பலமா ற்றங்களுடன் ஆட்டங்கள் ஆரம்பமாகின.

இதில் ஆரம்பித்த முதல் குறிப்பிட்ட நாள்கள் பலமில்லாத அணிகளுடன் பலமான அணிகளின் மோதல் இடம்பெற்றது. இதனால் ரசிகர்களின் பார்வை இந்த ஆட்டங்கள் மீது குறைவாகவே இருந்தன. பின்னர் கத்துக்குட்டி அணிகளும் சில ஆட்டங்களில் எதிரணிகளுக்கு ஆச்சரியம் கொடுக்க பத்தாவது உலகக் கிண்ணம் விறுவிறுப்படைந்தது.

இதில் இலங்கை அணி தனது சொந்த மண்ணில் பாகிஸ்தான் அணியிடம் தோல்வியை அடைந்தது. அதேபோன்று போட்டியை நடத்தும் மற்றுமொரு நாடாகிய இந்திய அணி தனது சொந்த மண்ணில் தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியைச் சந்தித்தது. இதனைவிட இந்திய அணியுடன் இந்திய மைதானத்தில் இடம்பெற்ற இங்கிலாந்துடனான ஆட்டம் ரசிகர்களை எதிர்பார்ப்பின் உச்சிக்கே கொண்டு சென்றது எனலாம். இந்திய அணியும் ஓட்ட மழை பொழிய பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியும் ஓட்ட மழை பொழிந்து ஆட்டம் சமநிலை அடைந்தது. இதில் இரு அணிகளின் பக்கமும் வெற்றி மாறிமாறி சென்று வந்தது. இருந்தும் கடைசியில் சமநிலையிலேயே முடிவடைந்தது.

இதே போன்று இங்கிலாந்து - அயர்லாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டமும் மிகுந்த பரபரப்பான ஆட்டமே. இங்கிலாந்து அணி அயர்லாந்தின் பந்து வீச்சை நொருக்கித் தள்ளி 327 ஓட்டங்களைக் குவிக்க அந்த ஓட்ட இலக்கை 7 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 49 ஓவரில் அயர்லாந்து வெற்றி இலக்கைத் தொட்டது. இந்த ஆட்டத்துடன் கெவின் ஓ பிரெய்ன் என்ற நாமம் ஓங்கி ஒலித்தது. பங்களாதேஷ் அணி போட்டியை நடத்தும் நாடாக இருந்ததுடன் சிறப்பான அணியாகவே உலகக் கிண்ண அரங்கினுள் நுழைந்தது. இருந்தும் தனது சொந்த மண்ணில் இரண்டு தடவைகள் பலமாக அடிவாங்கியது. மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் தென்னாபிரிக்க அணிகளுடனான ஆட்டத்தில் 100 ஓட்டங்களையே எட்டவில்லை. இதனால் ரசிகர்களின் கோபத்துக்கும் பங்களாதேஷ் ஆளாகியது. இருந்தும் இங்கிலாந்துடனான ஆட்டத்தில் வெற்றி பெற்று ரசிகர்களுக்கு அதிர்ச்சி விருந்தளித்தது.

இலங்கை அணியைப் பொறுத்த வரையில் ஆரம்பத்தில் பாகிஸ்தான் அணியுடன் சறுக்கியிருந்தாலும் தொடர்ந்து சகல ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இறுதி ஆட்டம் வரையில் முன்னேறி இருந்தது. இதில் இலங்கை அணி வீரர்களினால் புதிய சாதனைகளும் படைக்கப்பட்டன. இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க கென்யாவுடனான ஆட் டத்தில் ஹட்றிக் சாதனை படைத்தார். இதன் மூலம் உலகக் கிண்ண தொடரில் இரண்டு தடவைகள் ஹட்றிக் வீழ்த்திய முதலாவது வீரர் என்ற பெருமையை பெற்றுக் கொண்டார். இதே போன்று சிம்பாப்வே அணிக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான தரங்க - டில்ஷான் இருவரும் முதலாவது விக்கெட்டுக்காக 282 ஓட்டங்களைப் பகிர்ந்து புதிய சாதனை படைத்தனர். இவர்கள் மீண்டும் இங்கிலாந்து அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் பிரிக்கப்பட முடியாத இணைப்பாட்டமாக 233 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இலங்கை அணி பந்து வீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலும் அசத்தினாலும் களத்தடுப்பில் ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக சொதப்பியே வந்தது. இதனால் இறுதி ஆட்டத்தில் கிண்ணத்தை இழக்க வேண்டியும் ஏற்பட்டது.

இந்திய அணி தனது முதலாவது ஆட்டத்திலிருந்தே சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வந்தது. அந்த அணியின் முழுப்பலமும் துடுப்பாட்டத்திலேயே சார்ந்திருந்தது. களத்தடுப்பிலும் ஓரளவு சிறப்பாக செயற்பட்டது. இருந்தும் 'பட்டிங் பவர்பிளேயில்' சொதப்பி வந்த இந்திய அணி இறுதி ஆட்டங்களில் அதையும் சீர்செய்து ஆடி பத்தாவது உலகக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. ஆசிய நாடுகளில் முதன் முறையாக இந்தியா இரண்டாவது தடவையாகவும் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டது.

(II ஆம் பக்கம் பார்க்க)



# திறமையான அணி வென்றது

மும்பையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் இந்திய அணியிடம் தோல்வி அடைந்தது.


முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மஹேல ஜெயவர்த்தனவின் அபார சதத்தின் மூலம் 274 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பத்தில் தடுமாறினாலும் கம்பீர், டோனி ஆகியோரின் அபார அரைச் சதத்தின் உதவியுடன் 48 ஆவது ஓவரில் வெற்றி அடைந்தது.

பத்தாவது உலகக் கிண்ணத்தின் இறுதியாட்டத்தில் இந்திய அணி யுடனான தோல்வி குறித்து இலங்கை அணித் தலைவர் சங்கக்கார கூறியதாவது:-

எங்களை விட சிறந்த அணிதான் உலகக் கிண்ணத்தை வென்றுள்ளது. கம்பீர் மிகவும் சிறப்பாக விளையாடினார். இதே போல அணித்தலைவர் டோனியும் பொறுப்புடன் விளையாடி எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் செய்து விட்டார். அவரது ஆட்டம் புத்திசாலித்தனமாக இருந்தது.

இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை சிறப்பாக உள்ளது. 300 ஓட்டங்கள் எடுத்திருந்தாலும் போதுமானதாக இருந்திருக்காது என்று நினைக்கிறேன். தொடர்ந்து விக்கெட் கைப்பற்றியும் இந்தியாவுக்கு அதிக நெருக்கடி கொடுக்க முடியாமல் போனது. இவ்வாறு அவர் கூறினார். (15)



# கூட்டு முயற்சி

உலக கோப்பையை வென்றது குறித்து அணித்தலைவர் டோனி கூறியதாவது:-

வீரர்களின் கூட்டு முயற்சியால் உலகக் கிண்ணத்தை வென்றோம். கிண்ணத்தை வெல்ல ஒவ்வொரு வீரரும் முக்கிய பங்கு வகித்தனர். இந்த வெற்றியை எப்படி கொண்டாடுவது என்றே எனக்குத் தெரியவில்லை. வெற்றிக்கான ஓட்டத்தை நான் சிக்ஸர் மூலம் அடித்த போது அதிகமாக உணர்ச்சிவசப்பட்டேன். 'கிரீஸ்ஸை' விட்டு பாதி தூரம் வந்து இந்த 'ஷொட்டை' அடித்தேன். விக்கெட்டை பிடுங்கி எனது மகிழ்ச்சியை வெளிப் படுத்தினேன்.

என்னுடன் இருந்த யுவராஜ்சிங்கும் அதிக உணர்ச்சி வசப்பட்டடார். நாட்டு மக்களின் பேராதரவால் இந்த வெற்றி கிடைத்தது. மும்பை வான்கடே ரசிகர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். தொடக்கத்தில் ஷேவாக், டெண்டுல்கர் ஆட்டம் இழந்தபோது ஒவ்வொரு ஓட்டத்துக்கும் கைதட்டி வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

இறுதி ஆட்டத்தில் ஸ்ரீசாந்துக்கு பதிலாக அஸ்வினைச் சேர்த்து இருக்கலாமே, நான் முன்னதாக களம் இறங்கியது ஏன் என்று பல கேள்விகள் கேட்கலாம். எனது முடிவு எதுவாக இருந்தாலும் இறுதியில் வெற்றி பெற்றதால் அதைப்பற்றி சொல்வதற்கு ஒன்றும் இல்லை. நான் ஓர் அதிர்ஷ்டக்காரன். கிரிக்கெட்டின் அனைத்து நிலையிலும் (டெஸ்ட், ஒருநாள் போட்டி, 20 ஓவர் போட்டி) எனது தலைமையிலான அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இவ்வாறு டோனி கூறினார். (15)

## அதிகூடிய சிக்ஸர்கள்

| | |
|---|---|
| ரெய்லர் - | 14 சிக்ஸர்கள் |
| பொலாட் - | 11 சிக்ஸர்கள் |
| கெவின் ஓபிரெயின் - | 9 சிக்ஸர்கள் |
| சச்சின் - | 8 சிக்ஸர்கள் |
| வில்லியர்ஸ் - | 7 சிக்ஸர்கள் |

## விக்கெட் காப்பில்

| | |
|---|---|
| சங்கக்கார - | 14 ஆட்டமிழப்பு |
| ஹடின் - | 13 ஆட்டமிழப்பு |
| கம்ரான் அக்மல் - | 12 ஆட்டமிழப்பு |
| பிரியர் - | 10 ஆட்டமிழப்பு |
| தோமஸ் - | 10 ஆட்டமிழப்பு |

## களத்தடுப்பில்

| | |
|---|---|
| ஜெயவர்த்தன - | 8 பிடியெடுப்புக்கள் |
| கலிஸ் - | 6 பிடியெடுப்புக்கள் |
| பீற்றர்சன் - | 6 பிடியெடுப்புக்கள் |
| பொலாட் - | 6 பிடியெடுப்புக்கள் |
| டில்சான் - | 6 பிடியெடுப்புக்கள் |



## சிறப்பான இணைப்பாட்டம்

| | |
|---|---|
| தரங்க - டில்ஷான் | 282 ஓட்டங்கள் |
| தரங்க - டில்ஷான் | 231 ஓட்டங்கள் |
| அம்லா - வில்லியர்ஸ் | 221 ஓட்டங்கள் |
| சேவாக் - ஷோக்லி | 203 ஓட்டங்கள் |
| வொட்ஷன் - ஹடின் | 183 ஓட்டங்கள் |



10 ஆவது உலகக் கிண்ணத்துடன் இந்தியா...

| பெயர் | ஆட்டம் | விக்கெட்டுக்கள் | சிறந்த பெறுபேறு |
|---|---|---|---|
| அப்ரிடி | 08 | 21 | 05/16 |
| சகீர்கான் | 09 | 21 | 03/20 |
| ரிம்சவுத்தீ | 08 | 18 | 03/13 |
| பீற்றர்ஸன் | 07 | 15 | 04/12 |
| முரளிதரன் | 09 | 15 | 04/25 |

| பெயர் | ஆட்டம் | ஓட்டங்கள் | அதிகூடிய ஓட்டங்கள் | சராசரி | 100 | 50 | 4 S | 6 S |
|---|---|---|---|---|---|---|---|---|
| டில்ஷான் | 09 | 500 | 144 | 62.50 | 02 | 02 | 61 | 04 |
| சச்சின் | 09 | 482 | 120 | 53.55 | 02 | 02 | 52 | 08 |
| சங்கக்கார | 09 | 465 | 111 | 93.00 | 01 | 03 | 44 | 05 |
| ரொரட் | 07 | 422 | 92 | 60.28 | 00 | 05 | 28 | 00 |
| தரங்க | 09 | 395 | 133 | 56.42 | 02 | 01 | 52 | 02 |

## மீட்டுப் பார்க்க வேண்டிய...

( I ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை காலமும் உலகின் கிரிக்கெட் ஜாம்ப வானாக வலம் வந்துகொண்டிருந்த ஆஸ்திரேலிய அணி காலிறுதியாட்டத்தில் இந்திய அணியிடம் தோல்வியைத் தழுவி வெளியேறியது. இதன் மூலம் அதன் பன்னி ரண்டு வருட உலகக் கிண்ண ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

### இறுதி உலகக் கிண்ணம்

சர்வதேச ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய விக்கெட்டுக்களை வீழ்த்திய முரளி மற்றும் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற சச்சின் ஆகியோருக்கு இது இறுதி உலகக் கிண்ணம். அதிலும் முரளிதர னுக்கு இறுதி சர்வதேச ஒருநாள் ஆட்டம். இந்த பிரபலங்களைத் தவிர அக்தர், பொன்டிங், கலிஸ், ஸ்மித் என ஏனைய முன்னணி வீரர்களுக்கும் இது இறுதி உலகக் கிண்ணமாய் அமைந்துள்ளது.

### வாட்டிய காயங்கள்

இந்த முறை உலகக் கிண்ண போட்டியில் பல முன் னணி வீரர்கள் காயங்களால் அவதிப்பட்டனர். முரளி, மத்தியூஸ், வெற்றோரி என பெரும் நட்சத்திரங்களும் இதில் அடங்கினர். பிராவோ, பரத், பொலஞ்சர் ஆகியோர் ஆட்டங்களை இடைநடுவில் கைவிட்டு தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பினர்.

இவ்வாறு பல சோகங்கள் அமைந்திருந்தாலும் ஒரு நாள் போட்டிகள் மக்களின் ஆதரவை; இழந்து வருகின்றன என்ற வாதத்தை இந்த முறை இடம்பெற்ற உலகக் கிண்ணம் மறுத்துரைத்திருக்கின்றது. ✱